Registered as a Newspaper

பக்கங்கள் 6

விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY


**14 வயதுவரை கட்டாயக் கல்வி அடுத்த ஆண்டு முதல் அமுல்**

அடுத்த ஆண்டு ஜனவரிமாதம் தொடக்கம் 14 வயது வரை அனைத்து பிள்ளைகளுக்கும் கட்டாய கல்வி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில், பாடசாலைகளுக்கு செல்லாத பிள்ளைகள் பாடசாலைக்கல்வி பெறும்படி கட்டாயப்படுத்தப்படுவார்களென கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 03 | 19 11 94 | சனிக்கிழமை | ஓசை 274

# இராணுவம் பதுங்கித்தாக்கியதில் லெப். கேணல் மல்லி வீரச்சாவு

## லெப். கேணல் மல்லி சில குறிப்புக்கள்



நெடுங்கேணிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை பதுங்கியிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் லெப்டினன்ட் கேணல் மல்லி (அமுதன்) வீரச்சாவடைந்தார். இவர்பற்றிய குறிப்புகள் வருமாறு:

- ★ 1989-ம் ஆண்டு மணலாறு, முள்ளியவளையில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாம் மீதான தாக்குதல். (இத்தாக்குதலில் கப்டன் ஜேசுதாஸ், லெப் அன்சார் ஆகியோர் வீரச்சாவடைந்தனர்)
- ★ 1989 ம் ஆண்டு 12 ம் மாதம் கிளிநொச்சி 18-ம் போர் என்னும் இடத்தில் முகாம் அமைக்க முற்பட்ட ஈ.என்.டி.எல்.எவ்- இயக்கம் மீதான தாக்குதல்
- ★ கொக்காவில் முகாம் மீதான தாக்குதல்.
- ★ முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல்.
- ★ 199 -ம் ஆண்டு மாங்குளம் முகாமிலிருந்து மல்லாவிப் பக்கமாக முன்னேற முயன்ற இராணுவத்துடனான நேரடி மோதல் (இதில் நெஞ்சு, கை ஆகிய பகுதிகளில் விழுப்புண் அடைந்தார்)
- ★ மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதல்
- ★ வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் நோக்கி முன்னேறிய இராணுவத்தினருடனான நேரடி மோதல் (வன்னி விக்கிரம - 01)
- ★ தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருடனான நேரடி மோதல் (வன்னி விக்கிரம -02)
- ★ ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் (இத்தாக்குதலில் கையில் விழுப்புண் அடைந்தார்)
- ★ வண்ணான்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதல்
- ★ முல்லைத்தீவு சிலாவத்தை என்னும் இடத்திலிருந்து அளம்பில் நோக்கி முன்னேறிய இராணுவத்தினருடனான நேரடி மோதல்
- ★ கட்டைக்காட்டிலிருந்து புலோப்பளை நோக்கி முன்னேற முயன்ற 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையில் இராணுவத்தினருடனான நேரடி மோதல் (இதில் தலையில் விழுப்புண் அடைந்தார்)
- ★ பூநகரி இராணுவ முகாம் மீதான தவளை நடவடிக்கை
- ★ 1989-ம் ஆண்டு புலனாய்வுத்துறையில் இணைந்து வன்னிப் பிராந்தியப் பொறுப்பாளராக கடமையாற்றியவர். இக்காலப் பகுதியில் புலனாய்வுத் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வீரச்சாவடையும் வரை புலனாய்வுத்துறையில் கடமை ஆற்றி வந்துள்ளார்.

## இராணுவம் தலையை வெட்டிச்சென்றது மற்றும் ஒரு போராளி வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணிப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப் கேணல் மல்லி (அமுதன்) வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த லெப் கேணல் மல்லியின் தலையையும் சிறிலங்கா இராணுவத்தினர் வெட்டிக்கொண்டு சென்றுள்ளனர். இச்சம்பவத்தில் மேலும் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை 3-00 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

புதிய அரசாங்கம் பதவி ஏற்றதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் போர்இடைநிறுத்தம் ஒன்றை அறிவித்திருந்தவேளையில் இராணுவம் இத்தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த குருவாரமன்று தொடக்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் போர் இடை நிறுத்தம் ஒன்றை கடைப்பிடித்துவரும் நிலையில் சிறிலங்கா இராணுவம் இவ்வாறான தாக்குதலை நடத்துவதென்பது சமாதான முயற்சிகளுக்கு இராணுவத்தரப்பில் உள்ள பலமான எதிர்ப்புக்களையே காட்டுவதாக உள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம் சிறிலங்காவின்

[6ஆம் பக்கம் பார்க்க]

## வீரவேங்கை அருளப்பனின் வித்துடல் இன்று விதைப்பு

நெடுங்கேணியில் சிறிலங்கா இராணுவம் நேற்று முன்தினம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவடைந்த வீரவேங்கை அருளப்பனின் வித்துடல் இன்று காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு மு. ப. 10 00 மணியளவில் கரியாலை நாகபடுவான் குடியிருப்பில் மக்கள் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டம் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் தூயவிதை குழியில் விதைக்கப்படும்.



வீரவேங்கை அருளப்பன்

## இராணுவத்தினரின் நடவடிக்கை பாரதூரமான கொடூரச் செயல்

### புலிகள் வட்டாரங்கள் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப் கேணல் மல்லியைச் சுட்டுக் கொன்றதுடன் அவரது தலையையும் வெட்டி எடுத்துச் சென்றமையானது ஒரு பாரதூரமான கொடூரச் செயல் என விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைவர் பிரபாகரன் நல்லெண்ண சமிக்ஞையாக ஒரு வார காலப் போர் இடைநிறுத்தத்தை அறிவித்துள்ள இவ்வேளையில், சிறிலங்கா இராணுவத்தினர் இவ்வாறு கொடூரத்தனமாக நடந்து கொண்டமையானது, பெரும் கண்டனத்திற்குரிய தென்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### தலையைப் பெற்றுத்தர சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டபின் வெட்டி எடுத்துச் செல்லப்பட்ட லெப்டினன்ட் கேணல் மல்லியின் தலையை பெற்றுத் தருமாறு விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைக் கேட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை 3 மணியளவில் நெடுங்கேணிப் பகுதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் அவ்வழியால் வந்து கொண்டிருந்த போராளிகளை சுட்டுக்கொன்றனர்.

இதன்பின் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கேணல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செயலாளராக சிவில் சேவை அதிகாரி?

[கொழும்பு]

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நியமனத்தில் புதிய நடைமுறைகளைப்பின்பற்றப் போவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நியமனத்தில் ஓய்வு பெற்ற சிரேஷ்ட பாதுகாப்புப் படை உயரதிகாரிகளுக்கு இடமளிக்கப்பட்டு வந்தது. இந்த வகையான மரபு வழியான நடைமுறைகள் திருத்தப்பட்டு அனுபவமும் திறமையுமுள்ள சிவில்சேவை அதிகாரிகள் மேற்படி பதவிக்கு

[6 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் அரசு பேச்சுவார்த்தை இம்மாத இறுதியில் நடக்கலாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இம்மாத இறுதியில் நடைபெறலாமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து விரைவில் விடுதலைப்புலிகளுடன் தொடர்புகொள்ள இருப்பதாகவும் அதன் பின்பே பேச்சுவார்த்தைக்கான திகதியை வெளியிட முடியும் எனவும் அவ்வட்டாரங்கள் கூறின

அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறவுள்ள இப் பேச்சுவார்த்தைகளில் இம்முறை கலந்துகொள்ளும் அரசதரப்பு பிரதிநிதிகளில மாற்றம் ஏற்பட உள்ளது எனவும் இது குறித்து தறபோது ஆராயப்பட்டு வருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என அரசாங்க அதிகாரிகள் உறுதிபடத் தெரிவித்தனர்.

### உருவப்படம்

உள்ளே . . .

நெடுங்கேணிப் பிரதேசத்தில இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவடைந்த லெப். கேணல் மல்லி (அமுதன்) யின் உருவப்படம் இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுளது

## பிரதி அமைச்சர்களாக ஐந்து புதிய முகங்கள்

புதிதாக பிரதியமைச்சர்களை நியமிக்கும்போது, மேலும் ஐந்து புதுமுகங்களுக்கு இடமளிக்கப்படும் என பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி லக்ஷ்மன் கிரியெல்ல, செனவிரட்ண, ஹேரத் ராஜரட்ண, பியங்க அசோக ஆகிய நால்வரும் புதிதாக நியமனம் பெறுபவர்களில் அடங்குவர் எனத் தெரியவருகின்றது.

## டிசம்பர் 2இல் பாடசாலை விடுமுறை

(கொழும்பு)

சகல அரசினர் பாடசாலைகளும் மூன்றாம் தவணை விடுமுறைக்காக டிசம்பர் இரண்டாம் திகதி மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை மீண்டும் ஜனவரி இரண்டாம் திகதி திறக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவைஇன்றுவழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## புலமைப் பரிசில் முடிவு இன்று வெளியாகும்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று கொழும்பில் வெளியிடப்படவுள்ளன

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலய மாணவன் எம். யசிமன் தேசிய ரீதியில் 3-ம் இடத்தைப் பெற்றுள்ளார் இவர் 184 புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற அக்கரைப்பற்று முஸ்லிம் ஆண்கள் பாடசாலை மாணவன் 190 புள்ளிகளையும், இரண்டாம் இடத்தைப் பெற்ற அக்கரைப்பற்று அல்-ஹிதாயா வித்தியாலய மாணவனும் கொழு

[6ஆம் பக்கம் பார்க்க]

# பேச்சுவார்த்தை தொடர்பான உத்தி அரசாங்கத்தால் மறுபரிசீலனை

### பி. பி. ஸி. கொழும்பு செய்தியாளர்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா அரசாங்கம் வகுத்திருந்த உத்திகள மறு பரிசீலனை செய்யப்படுகிறது. இவ்வாறு பி. பி. சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:

காமினி திசாநாயக்கா கொலையுண்ட குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னர் அரசாங்கம் கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டும்- என்று ஒரு சாராரும் தேர்தலுக்கு முன்பாகக் காணப்பட்ட ஆர்வ அலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஆண்டு - 3**

ஆண்டு 3 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் 1996 மாதிரி வினாத்தாள் [தமிழ், கணிதம் ஆங்கிலம்] 20 - 11 - 1994 ஞாயிறு வெளியிடப்படும். தேவையானோர் தொடர்பு கொள்ளவும். புலமைப் பரிசில் மாதிரி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (10126)

## விவாகப் பதிவு

(கொழும்புத்துறை)

திருமணம் செய்து தம்பதிகளாக வாழ்பவர்கள் இதுவரை காலம் சட்டப்படி விவாகப் பதிவு செய்யாதவர்கள் தாங்கள் திருமணம் செய்த ஆண்டு, மாதம், திகதி ஆகிய முழுமையான விபரங்களுடன் கடிதமூலம் எழுதித் தத்தமது பகுதிச் சனசமூக நிலையங்கள் ஊடாக திருமணம் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்குமாறு யாழ். மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர் சங்கத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி க. ஸ்ரீ விக்கினேஸ்வரா தெரிவித்துள்ளார். (24)

## முதலிக்குளம் திருத்தம்

வட்டுக்கோட்டை பகுதியிலுள்ள முதலிக்குளம் திருத்த வேலைகள் அண்மையில் தேச நிர்மாணிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துரித நீர்வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நலசேவை நிறுவனம் ஒன்றின் நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையின் போது இக்குளம் ஆழமாக்கப்பட்டதுடன் வெள்ள அரிப்பினால் பாதிக்கப்பட்ட அணைக்கட்டுகளும் வலுவூட்டப்பட்டுள்ளன.

இக்குளம் திருத்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இக்குளத்தை அண்டிய பகுதிகளில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

## பல்கலை மாணவர்க்கு

யாழ் பல்கலைக்கழக இரண்டாம், மூன்றாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கும், விஞ்ஞான பீட முதலாம் வருட (ஏ. பி) மாணவர்களுக்கான அவசர பொதுக்கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கலைப்பீட மாணவர்களுக்கான கூட்டம் கைலாசபதி அரங்கிலும், விஞ்ஞானபீட மாணவர்களுக்கான கூட்டம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையிலும் நடைபெறவுள்ளன. (5)

## நுண் அறிவுப் போட்டி

(தொல்புரம்)

வாரிவளவு நல்லியக்கச் சபையினரால் நடாத்தப்படும் முன்பள்ளி கல்வி மாணவர்களுக்கான நுண்ணறிவுப்போட்டி மார்கழி மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ் கல்லூரிவீதி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என சபைச் செயலர் திரு. பத்மநாதன் தெரிவித்துள்ளார். (41)

## விக்டர் நினைவாக

காந்தான்குளம்வீதி முதலைகுத்தி வீதி, துவரங்கேணிவீதி, வட்டுப்பித்தான் மடுவீதி, கஞ்சியன் வீதி, நீலாசேனைவீதி ஆகிய வீதிகளின் இருமருங்கிலும், உயிலங்குளம் கிராமத்திலும், மன்னார் மாவட்ட தளபதி லெப் கேணல் விக்டர் ஒஸ்கா, 2ம் லெப் றோம் ஆகியோரின் எட்டாம் ஆண்டு நினைவாக 20000 பனை விதைகள் நடுகை செய்யப்பட்டன. மேற்படி பனை நடுகை கற்பகச்சோலைத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியின் ஊக்குவிப்பின் பேரில் மாந்தை தெற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், உணர்வுபூர்வமாக இணைந்து கொண்டனர்.

# சந்தைப்படுத்தல் சீரானாலே உற்பத்தியை தொடரலாம்

## ஆய்வுப்பட்டறையில் கருத்து

2000 ஆண்டளவில் எங்கள் மாவட்டத்திற்கு மேலும் 55, 800 புதிய குடியிருப்புக்கள் தேவை என்று உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் தொடர்பாக ஆய்வுப் பட்டறையின் 2ம் நாள் பிற்பகல் நிகழ்வில் சேவைகள் என்ற துறையமர்வில் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமது தலைமையுரையில் இந்த மாவட்டத்தில் தற்போது 1,60,000 மனித குடியிருப்புக்கள் இருப்பதாகவும் இவற்றில் நகரப் பகுதி நிரந்தரக் குடியிருப்பு சுமார் 85, 280 ஆகவும் அரை நிரந்தரக் குடியிருப்பு சுமார் 53 200 குடியிருப்புக்களும் 21 440 குடிசைகளாகவும் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்ததாக இடம்பெயர்ந்தோர் பிரச்சினையும் அவர்களுக்கான புனர்வாழ்வும் என்ற பொருளில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் க. கணேசலிங்கம் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

வடக்கு - கிழக்கின் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் என்ற தலைப்பிலான கருத்தரங்குக்கு தலைமை தாங்கிய புனர்வாழ்வுப் பகுதி உதவி திட்டப் பணிப்பாளர் திரு. க. மகாலிங்கம் அவர்கள் வடக்கு-கிழக்கில் உள்ள சந்தைப்படுத்தலும் விநியோகமும், கூட்டுறவு அபிவிருத்தியும் என்ற அடிப்படையில் அமையும் இதுவரை நடைபெற்ற அமர்வுகளில் விவசாயம், கைத்தொழில், கடற்தொழில், கால்நடை என்பனவற்றின் உற்பத்தித்துறைவிடயங்கள் ஆராயப்பட்டன. அவற்றின் உற்பத்திப்பொருட்களின் சந்தைப்படுத்தல் என்ற விடயம் முக்கியமாக தொனித்தன. இத்துறைகளிலுடைய உற்பத்தி அளவு, உற்பத்தியான பொருட்களின் சந்தைப்படுத்தலில் தங்கி உள்ளது. சந்தைப்படுத்தல் இல்லாவிட்டால் உற்பத்தி தொடர முடியாது. எனவே சரியான சந்தைப்படுத்தல் அமையாவிட்டால் உற்பத்தி பெருக்கத்தின் பயனை அடையமுடியாது என குறிப்பிட்டார். அதன் பின் யாழ் பல்கலைக்கழக பொறியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. பி. சிவநாதன் வடக்கு - கிழக்கின் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் என்ற தலைப்பிலும் தேசிய சேமிப்பு வங்கியின் பிராந்திய உதவி பொதுமுகாமையாளர் திரு. ந. சிவபாலகணேசன் வடக்கு-கிழக்கு அபிவிருத்தியின் நிதி நிறுவனங்களும் என்னும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினர்.

இரண்டாம் நாள் இறுதி அமர்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற தலைப்பில் தலைமையுரை ஆற்றும்போது இவற்றின் சேவை 1983-ல் ஆரம்பித்த போதும் இரண்டாவது ஈழப் போர் தொடங்கியபின்னே எமது பகுதிகளில் இந்த நிறுவனங்கள் செய்யும் சேவை மகத்தானது. இதன் முக்கியமாக இடம்பெயர்ந்த மக்களின் குடியேற்றப்பிரச்சினை சுகாதாரம், கல்வி, போசாக்கு போன்ற அன்றாட பிரச்சினைகளுக்கு அரசு நிட்டமிட்ட அழுத்தங்களை கொடுக்கபோதும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் எதிர்நீச்சல் போட்டு நிறைவு படுத்த முடிந்தது. இன்று இவை ஒருமுகப்பட்டு ஒரு ஒன்றியமாக உருவாகி சேவைகளை ஒன்றிணைத்து இருக்கின்றன. இதன் சேவைகள் காலத்தின் தேவைகளை மையமாக வைத்து மக்களிடையே இன்றியமையாத சமூகத்தின் ஊடாக நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. இங்கு மக்களின் பங்களிப்புடன் சமூகநீதி சுயசார்பு அபிவிருத்தி போன்ற பெறுமானங்களை கருத்திற் கொண்டு செயல்பட்டு வருகின்றன என்று கூறினார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழக பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களும் அவற்றின் செயல்பாடுகளும் என்னும் பொருள் பற்றியும் கலாநிதி பிதா வை. சந்திரகாந்தன் அவர்களும் கருத்துரை வழங்கினர்.

மாவீரர் எழுச்சிவார

## கமக்காரர் அறிமுக அட்டை மீள புதுப்பிக்கலாம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் இருந்து வரும் கமக்காரர் அறிமுக அட்டைகள் 1995ம் ஆண்டின் பயன்பாட்டிற்கென மீளப்புதுப்பித்தல் செய்யப்பட்டு வருகின்றன. இவ் வேலைகள் விவசாயிகளின் வசதி கருதி தொடர்ந்து மேலும் ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இதுவரை மீளப்புதுப்பிக்கத் தவறிய விவசாயிகள் அனைவரும் தமது அட்டைகளை மீளப் புதுப்பித்தல் செய்து கொள்ளுமாறும், இதுவரை காலமும் அட்டை பெறாதுள்ள விவசாயிகள் தமது பயிர் செய் நிலங்களைப் பதிவு செய்து கமக்காரர் அறிமுக அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள் விற்பனை நிலையங்கள் அனைத்திலும் விதை தானியங்கள், கம இரசாயனங்கள், எரிபொருட்கள், விவசாய உபகரணங்கள், போன்ற அனைத்து விவசாய உள்ளீட்டுப் பொருட்களையும் கமக்காரர் அறிமுக அட்டைகளில் பதிவு செய்து பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் அட்டை பெற்றுக் கொள்ளாதுள்ள ஒவ்வொரு விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகாமல் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.


இரு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும்
**மாபெரும் வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில்**
பரிசு பெற்றோர்
இலக்கங்களும் பெயர்களும் வருமாறு:

1-ம் பரிசு 11212 சுவர்மணிக்கூடு
அசோக்குமார்
04, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி

2-ம் பரிசு 10425 எவர்சில்வர் பொருள்கள்
க. தியாகராசா
ஸ்ரேசன் றோட், மல்லாகம்

3-ம் பரிசு 10462 T சேட்
பா. பாமா
7/2, இரட்ணம் வீதி, வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

**ஆறுதல் பரிசுகள்**

1-ம் பரிசு 8424 குடை
நா. யோகேஸ்வரி
நாவலடி, அல்வாய் வடக்கு, அல்வாய்

2-ம் பரிசு 8485 தொப்பி/சாப்பாட்டுப்பெட்டி
P பரமசிவம்
நெல்லியடி, கரவெட்டி

3-ம் பரிசு 10494 அல்பம்
சிவஜா சிவநேசன்
அன்னசத்திர லேன், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்

4-ம் பரிசு 11221 பாடசாலைப் பை
சபாரிஸ்
04, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி

5-ம் பரிசு 10543 பிளாஸ்ரிக் வாளி
க குலேந்திரராஜா
சூராவத்தை சுன்னாகம்

6-ம் பரிசு 9252 எவர்சில்வர் பேணிகள்
வ. சின்னத்தம்பி
121, திருநெல்வேலி, கோப்பாய்

7-ம் பரிசு 10474 பாடசாலைப் பை
ஆர் எஸ். அனந்தராசா
வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணி

நான்காவது சீட்டிழுப்பு தை மாதம் 16-ம் திகதி 1995 திங்கட்கிழமை நடைபெறும். இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள். இன்றிலிருந்து 15-12-94 ற்கு முன் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்**
14, சீனியர் ஒழுங்கை. யாழ்ப்பாணம்.
(சி-10735)


## இறுதிபோட்டிக்கு தெரிவு

யாழ் வடக்கு கல்வி வலயம் இரண்டினால் நடாத்தப்படவுள்ள வலயமட்ட சிறுவர் சித்திரப்போட்டியின் இறுதிப் போட்டிகளில் கலந்துகொள்ள சங்கானை கல்விக்கோட்டத்தை சேர்ந்த பாடசாலைகளின் சார்பில் இரு மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

மேற்படி போட்டிக்கு:- பொ. சிவபாலன் (வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாசாலை) த. அரவிந்தன் (சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம்) ஆகிய இருவருமே தெரிவானவர்களாவர் (41)

## இரு கன்றுகளை ஈன்ற பசு

சுழிபுரம் வழக்கம்பரையைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான ஒரு ஜேசி இன கறவைப்பசு, இரண்டு கன்றுகளை ஈன்றுள்ளது.

கடந்த புதன் அன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரண்டும் பசுக்கன்றுகளாகவே காணப்படுகின்றன. நல்ல திடகாத்திரமான நிலையில் தென்படும் இவ்விரு பசுக்கன்றுகளும் வழமையான தோற்றத்தைவிட உருவத்திலும் சற்று பெரிதாக பொலிவுடன் காணப்படுகின்றன நல்லின கறவைப் பசுக்களை பேணிப் பாதுகாத்து வளர்ப்பதில் வல்லவரான பண்ணாகம் வழக்கம்பரை அம்பலவாணர் திருநாமம் என்பவரின் கறவைப் பசுவின் கன்றுகளே இவையாகும் (41)

## மாதாந்த உதவிப் பணம்

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவு தற்போது யாழ். பிரதம தபாலகத்தில் இயங்கும் மேற்படி பிரிவுகளிற்கான தபாலகங்களில் வழங்கப்படுகின்றது. அத்துடன் தொழுநோய், புற்றுநோய், காசநோய் என்பவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான உதவு தொகையும் வழங்கப்படுகின்றது. (22)

## சிரமதான பணியில் அரச ஊழியர்கள்

(தொல்புரம்)

மாவீரர் எழுச்சி வாரத்தையொட்டி வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலக ஊழியர்களும் சுழிபுரம உப அலுவலக ஊழியர்களும் இணைந்து சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

கடந்த புதன் அன்று சுழிபுரம் சத்தியக்காடு சந்தை சதுக்கத்தையும் அருகில் உள்ள இடங்களையும் துப்புரவு செய்தும் நிலப்பகுதிகளை செப்பனிட்டும் பெரிய அளவிலான சிரமதானப் பணியில் மேற்கொண்டதை அவதானிக்க முடிந்தது (41)

## சான்றிதழ்களை வழங்க நடத்துனர் பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலனசபையினரால் வருடந்தோறும் நடாத்தப்படும் பரீட்சைக்கான சான்றிதழ்கள் பல வருடங்களாக மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவரிடையே வருடந்தோறும் சமய பாடப் பரீட்சையை மேற்படி சபையினர் நடாத்தி வருவது தெரிந்ததே.

கடந்த சில வருடங்களாக மேற்படி சபையினரால் பரீட்சைகள் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டபோதிலும் சித்தியடைந்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கப்படாதது குறித்து மாணவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

## கணித விஞ்ஞான பாட போட்டி முடிவுகள்

(தொல்புரம்)

சங்கானை கல்விக்கோட்ட மட்டபாடசாலைகளில் ஆண்டு 4 5 வகுப்பு மாணவர்களுக்கிடையே அண்மையில் நடாத்தப்பட்ட கணித, விஞ்ஞான வினாவிடைப்போட்டி முடிவுகளில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

ஆண்டு 4 பிரிவில் ப. அச்சுதன், ந. நிலாமினி வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி ப. பபிதா சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாலயம் பி. தாட்சாயினி பொன்னாலை வரதராசப்பெருமாள் வித்தியாலயம், மா. தாட்சாயினி அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், ஜெ. கௌசலா தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை.

ஆண்டு 5 பிரிவில் செ. கபிராமி யாழ்ப்பாணக் கல்லூரி, அ. கபிலஸ் சங்கானை சிவப்பிரகாசம். வி. ந. சுஜாந்தினி சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை, ஸ்ரீ. ஸ்ரீயாம் வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாசாலை சி. உமைபாலன் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை. (41)

## அனுமதி அட்டை வந்தடைந்தது

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாத முற்பகுதியில் நடைபெறவுள்ள க. பொ. த. (சா/த) பரீட்சைக்கான காகிதாதிகள் மற்றும் அனுமதி அட்டைகள் என்பன நேற்று யாழ் கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றுள் அனுமதி அட்டைகள் இரண்டொரு தினங்களில் தரம் பிரிக்கப்பட்டு பரீட்சார்த்திகளுக்கு உடன் கிடைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று பருத்தித்துறையை வந்து சேர்ந்த "மாகோ" கப்பலிலேயே இவை எடுத்து வரப்பட்டன. (பா)

## லவனிதா பாடசாலை இடநெருக்கடிக்கு தீர்வு

நாவற்குழி லவனிதா குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள யா/நாவற்குழி அ.த.க பாடசாலையில் மாணவர்களின் இடமின்மையைக் கருத்திற் கொண்டு தமிழீழ புனர்வாழ்வுக்கழகம் கொட்டகை ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

100 அடி நீளமும் 25 அடி அகலமும் உடைய இக்கொட்டகை இரண்டினை மேற்படி கழகம் அமைத்துக் கொடுத்துள்ளது இதற்கு தேவையான கூரை தடுகை கல்வித்திணைக்களம் வழங்கியுள்ளது இதனால் தற்போது இப்பாடசாலையின் பெரும் இட நெருக்கடி நீங்கியுள்ளது (86)

## மாவீரர் நினைவாலயம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வணிகர் கழகம் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி ஆனைப் பந்தியில் மாவீரர் நினைவாலயம் ஒன்றை நிர்மாணித்துள்ளது இந்த மாவீரர் நினைவாலயம் வரும் திங்கட்கிழமை காலை 8 30 மணிக்கு வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த மாவீரர் நினைவாலய திறப்பு நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைத்து வணிகர்களையும் ஊழியர்களையும் போராளிகள், பொதுமக்களையும் யாழ் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (சி)

## அடிப்படை வசதிகளின்றி மாற்றல்கோரும் மாணவர்

திருமலை இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் போதிய வசதிகள் இன்மையால் 1993-94 கல்வியாண்டு மாணவர்கள் வவுனியா பல்கலைக்கழக கல்லூரிக்கு மாற்றல் கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்து வருகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் போதியளவு விரிவுரையாளர் மற்றும் தபாபாட வசதிகளும் ஏனைய நலச்சேவைகளும் இன்மையே மாணவர்கள் மத்தியில் குழப்பநிலை தோன்றியுள்ளதாகவும் இதனாலேயே பெருமளவு தமிழ் மாணவர்கள் வவுனியா கல்லூரிக்கு இடமாற்றம் பெற விண்ணப்பித்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன (05)


**நினைவு கூருகின்றோம்...**

**19. 11. 1994**

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் எமைப் பிரிந்த -

**கோபி** (மகாதேவன் இளங்கோ 'திகிரி' - தம்பளை - பருத்தித்துறை)

1988ஆம் ஆண்டு காரைநகரில் இந்தியப் படையினரின் முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சக்கரை** (தம்பு துரைராசா - காரைநகர் - யாழ்)

**கோபி** (ஆறுமுகம் தவபாலன் - களபூமி, காரைநகர் - யாழ்)

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரம் - தச்சன்காட்டுச் சந்திப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2ம் லெப். மணிமேகன்** (இராசையா அனுராம் - சோற்றுப்பிடிச்சி - சண்டிலிப்பாய் தெற்கு)

1992 ஆம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**மேஜர் ஆதித்தன்** (சின்னப்பு ஜெயதாஸ் - தங்கபுரம், அலம்பில் - முல்லைத்தீவு)

**மேஜர் சிலம்பரசன்/கிசிங்** (குணபாலசிங்கம் சிவபாலேஸ்வரன் - சாஸ்திரிகூழாங்குளம் - வவுனியா)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10732)



**41-ம் நாள் நினைவஞ்சலி**



மண்ணில்:- 25- 3- 80

விண்ணில்:- 10- 10- 94

திதி 19- 11- 94

**இராசு சிவகரன்**

அம்மா- தவமணிதேவி
ஜேர்மன் அண்ணா- சிவகுமார்
அக்கா- லதாயினி
சின்னக்கா- கலாநிதி
சின்னண்ணா- சிவரூபன்

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய் (10131)

# வேடுவர் தலைவர் திசகாமியை ஐ.தே.கவின் தலைவராக்குக!

- அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)
மகியங்கனை தொகுதியில் மட்டுமே, ஐக்கிய தேசியக் கட்சிவெற்றி பெற்றுள்ளதால் அங்குள்ள வேடுவர் தலைவர் திசாமியையே ஐ. தே.கவின் தலைவராக தெரிவு செய்ய வேண்டும் என பிரதி அமைச்சர்ஜெயராஜ்பெர்னாண்டோ புள்ளேஐ. தே கவுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இப்போதைய சூழ்நிலை யில் தேர்தல் ஒன்று நடத்தி னால் திசாமி மட்டுமே ஐ. தே. க தரப்பில் பாராளு மன்ற உறுப்பினராக வர முடி யும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை ஐ.தே.கவினர் ஒரே நாடு, ஒரே நோக்கு, ஒரே ஜனாதிபதி என சுலோ கங்களை வெளியிட்டனர். இப்போது அவற்றுடன் புதிய சுலோகமொன்றும் சேர்ந்துள் ளது. அது ஒரே தொகுதி என்ற சுலோகமாகும். அது மகியங்கனை தொகுதியைக் குறிக்கும் என அமைச்சர் அஷ்ரப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## ஒளிவிழா

புனித சாள்ஸ் வித்தியாலய ஒளிவிழா இன்று சனி பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் திருமதி பி. எல். சின்னத்துரை தலை மையில் நடைபெறும். பிர தம விருந்தினராக அருட்திரு சகாயநாயகம் அடிகளும் சிற ப்பு விருந்தினர்களாக ஜெய குமார், விக்ரர் ஆகியோர் கலந்து கொள்வர்.

## பொருளியல் நோக்கு சகாய விலையில்

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக்கழக மக் கள் வங்கி கிளையிலும், சமூக விஞ்ஞான மன்றத்தினரின் பொருளியல் பகுதியிலும் 'பொருளியல் நோக்கு' தொ குக்கப்பட்ட ஐந்து இதழ்கள் சகாய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறதாக தெரிவிக்கப்படுகிறது. (05)

# புலிகளை அழித்தபின் பேச்சு ஐ.தே.க நிலை அர்த்தமற்றது

-பிரதியமைச்சர் சந்திரசேகரன்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளை அழித் தபின் இனப்பிரச்சினை பற் றிப் பேசுவோம் என்ற முன் னைய ஐக்கிய தேசியக்கட்சி அரசின் நிலைப்பாடு அர்த்த மற்றது இதனால் பொதுமக் களே அழிந்தார்கள் என பிர தியமைச்சர் பி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று பாரா ளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச்சட்டநீடிப்பு மீதான பிரேரணை மீது உரைநிகழ்த்திய அவர் ஜனா திபதி தேர்தலில் அரசுக்கு கிடைத்தது போன்ற ஆதரவு முன்பு எந்த அரசிற்கும் கிடை த்ததில்லை நாட்டின் அமை தியை நாடியே இந்த மாபெ ரும் ஆதரவு அரசுக்கு வழங் கப்பட்டுள்ளது, என்றார்

ஐ தே.க.எம்.பியான ரஜித சேனாரத்ன பேசும் போது பாலத்துறை குண்டு வெடிப் பில் மயிரிழையில் தப்பியவன் நான் ஐந்தாவது தட வையாக குண்டுத் தாக்குதலி லிருந்து தப்பியவன் நான் கடந்த 17 வருடங்களில் வடக்கிலும் தெற்கிலும் ஜே வி·பி மற்றும் விடுதலைப் புலிகளின் நடவடி க்கையில் ஐ தே.க முக்கியஸ் தர்கள் பலர் கொல்லப்பட்ட னர் சுதந்திரக்கட்சி இனவாத த்திலிருந்து விலகி செயல் படு வதை வரவேற்கிறேன் என் றார்.

## மோதல் தவிர்ப்பு மூலம் போர் நிறுத்தப்படலாம்

பிரதி அமைச்சர் அநுருத்தரத்வத்த

(கொழும்பு)
மோதல்கள் தவிர்க்கப்படு மானால் அது சம்பிரதாய பூர்வமான யுத்த நிறுத்தத் திற்கு இட்டுச் செல்லும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடு கையில், புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை தான் வரவேற்பதாகவும் தெரிவித் துள்ளார்.

## 7 லட்சம் வாக்குகள் ஐ. தே. க. இழந்துள்ளது

(கொழும்பு)
நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலை ஜனாதிபதி தேர் தலுடன் ஒப்பிட்டுப் பார்க் கையில் 7 லட்சத்து 83 ஆயி ரத்து 87 வாக்குகள் ஐ. தே. கவிற்குக் குறைவாகக் கிடை த்துள்ளது.

இதேவேளை பொது ஜன ஐக்கிய முன்னணி வாக்குகள் 8 லட்சத்து 21 ஆயிரத்து 382 ஆல் அதிகரித்து இருப்பதாக தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

## கவனிப்பாரற்ற நிலையில் வாகன உதிரிப்பாகங்கள்

(கொழும்பு)
பொலிஸ் திணைக்களத்தின் வழங்கல் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரிகளால் இறக் குமதி செய்யப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான வாகன உதிரிப்பாகங்கள் நாரஹென்பிட்டியவில் உள்ள பொலிஸ் கராச்சில் கவனிப் பார் அற்ற நிலையில் கிடப்ப தாகக் கூறப்படுகிறது.

அதிலும் சில குறிப்பிடப்ப ட்ட உதிரிப்பாகங்கள் அதிக தரகுப் பணம் பெறப்பட்டு இந்தியக் கம்பெனி ஒன்றிடமி ருந்து இறக்குமதி செய்யப்ப ட்டிருப்பதாகவும் தெரிய வரு கிறது.

பொலிஸ் திணைக்களத்தில் சாதாரணமாக பாவிப்பில் உள்ள ஜீப். போன்ற வாகன ங்களுக்கான உதிரிப்பாகங் கள் மிக அரிதாகவே வழங்க ப்பட்டு வந்ததாகவும், உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகள் பொலிஸ் சாரதிகளையே திரு த்த வேலைகளை செய்யும்படி பணித்து வந்ததாகவும். உயர் மட்ட பொலிஸ் அதிகாரிக ளின் மோட்டார் கார்கள் உட னுக்குடன் திருத்தப்பட்டு வந் ததாகவும் மேலும் கூறப்படு கிறது.

## 60 வயதுக்கு மேலும் சேவையாற்ற அனுமதி

(வடமராட்சி)
வடக்கு கிழக்கு மாகாண சபையில் சுகாதாரத் திணை க்களத்தில் அறுபது வயதுக்கு மேற்பட்ட முக்கிய உத்தியோ கத்தர்கள் தொடர்ந்தும்பணி யாற்றுவதற்காக வேண்டிய நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாணசபை எடுத்து வருகிறது

வடக்கு கிழக்கில் ஏற்பட்டு வரும் நெருக்கடி நிலையில் ஓய்வு பெறும் வைத்தியர்கள் நிபுணர்களை தொடர்ந்து சேவையாற்ற மாகாணசபை பிரதம செயலாளர் சிபார்சு செய்து மத்திய அரசிற்கு கடி தம் அனுப்பி வைத்துள்ளார்

இதனையடுத்து மத்திய அரசு இதனை அங்கீகரித்து இவர்களது சேவையை மேலும் நீடிக்க வைக்குமென வும் இறுதியாக வெளிவந்த சுற்றுநிருபத்தின் படி சம்பந் தப்பட்டோர் தமக்குக் கிடை த்த காலப்பகுதி வரை சேவை யாற்றலாமெனவும் சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன (யோ)

## 3 வருடமாக காத்திருக்கும் பத்திரிகையியல் மாணவர்

(யாழ்ப்பாணம்)
1990/91 கல்வியாண்டில் யாழ் திறந்த பல்கலைக்கழக த்தில் பத்திரிகைத் துறையில் டிப்புளோமா கற்கை நெறி க்கு பதிவு செய்த மாணவர் களுக்கு இதுவரை எவ்வித பாடக்குறிப்புக்களும் அனுப்பி வைக்கப்படவில்லை யெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று வருடங்க ளாக காத்திருக்கும் பத்திரி கைத்துறை மாணவர்களுக்கு யாழ்திறந்த பல்கலைக்கழக இணைப்பாளர் ச. ஆ ஞானே ந்திரன் இம் மாணவர்களின் நிலைப்பாடு பற்றி நாவலவில் உள்ள திறந்த பல்கலைக் கழக சமூகவியல் பகுதியின ருடன் இறுதி முடிவெடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## ஐ. தே. க. ஆதரவாளர் வீடு எதிர்த்தரப்பினரால் தாக்கு

(கொழும்பு)
கட்டான தேர்தல் தொகு தியின் திம்பிரிகஸ்கட்டுவ பகு தியில் ஐ. தே. க. ஆதரவா ளர் ஒருவரது வீடு பொதுமக் கள் ஐக்கிய முன்னணி ஆதர வாளர்களால் தாக்கப்பட்ட தாகக் கூறப்படுகிறது. இச் சம்பவம் பற்றி நீர்கொழும்பு பொலிசில் புகார் செய்யப்ப ட்டுள்ளது.

இத்தாக்குதலால் வீட்டுக்கு 5,62,500ரூபாபெறுமதியான சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கிளிநொச்சி நகரை புனரமைக்க நடவடிக்கை

தமிழீழத்தின் முக்கிய நகர ங்களுள் ஒன்றாக விளங்கும் கிளிநொச்சி நகரத்தை புனர மைப்பதற்கான நடவடிக்கை க்காக கிளிநொச்சி கச்சேரி அதிகாரிகளை கொண்ட குழு ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட் டுமான பகுதியினரின் ஒருங் கிணைப்பின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

இதற்காக தற்போது ஆர ம்ப திட்டமிடல், வடிவமை ப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

# தங்கு நிலையற்ற, நிலையான சமூகபொருளாதார அடித்தளம்தேவை

நிர்வாகப் பொறுப்பாளர் டொமினிக்

(யாழ்ப்பாணம்)
எமது போராட்டம் தமிழீழ இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இவ் வேளை யில் தங்கு நிலையற்றதும், நிலைத்து நிற்கக்கூடியதுமான சமூக பொருளாதார அடித் தளம் ஒன்றினை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது என்பதை எல் லோரும் ஏற்றுக்கொள்வீர்கள் எமது போராட்ட காலத்தி லேயே சகல துறைகளிலும் சமாந்தரமாக முன்னேறிச் செல்லவேண்டி இருக்கிறது.

கடந்த புதனன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அனர்த்தங்களுக் கான அபிவிருத்தித் திட்டங் களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் நோக் குடன் நடைபெற்ற ஆய்வுப் பட்டறையில் உரையாற்றிய தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் டொமினிக் தெரிவித்தார்.

எமதுபொருளாதாரம் மரபு சார்ந்த தொழில் நுட்பத் திற்கு மீண்டும் செல்லாது பொருத்தமான தொழில் நுட் பங்களோடு வலுபெறக் கூடிய பொருளாதார கட்ட மைப்பொன்றை கட்டியெழு ப்பவேண்டிய அவசியமும், அவசரமும் எழுந்துள்ளது.

சமாந்தரமான அபிவிருத்தி நிகழ்வுகள் போராட்டத்தோடு ஏற்படாவிட்டால் இன்று நெல்சன் மண்டேலா அவர் கள நாடுகளிற்கிடையிலே சென்று இரந்து நிற்கின்ற நிலைமைதான் எங்களது நாட் டிற்கும் ஏற்படும். அவ்வா றான ஒரு நிலைமை ஒன்று ஏற்படாமல் எங்களது நாட் டினது பொருளாதாரம் எங் களது நாட்டிலே தங்கியிருக்க வேண்டிய கட்டமைப்புக்களை உருவாக்கவேண்டிய ஒரு தேவை. இந்த தேவையை நிறைவேற்றுவதற்கான ஆலோசனை சபை அதற்கான ஒரு அடிக்கட்டுமானமாக இந்த கருத்தரங்கை நான் நம்புகிறேன்.

## சைக்கிள் திருடியவருக்கு குற்றப்பணம் அறவீடு

நாவற்குழிசிலன்நகர்ப்பகுதி யைச் சேர்ந்த ஒருவருடைய துவிச்சக்கர வண்டியை கள வாடியவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் குற்றப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளித் தது.

வவுனியா கொந்தக்காரன் குளத்தைச் சேர்ந்த நபர் ஒரு வர் மேற்படி பகுதியைச் சேர் ந்தவரின் சைக்கிளை கிளாலி யில் வைத்து திருடினார். இவரை பளைக் காவல்துறை யினர் மன்றில்முற்படுத்தினர்

நீதிமன்று குற்றவாளி குற்ற த்தினை ஒப்புக் கொண்டதன் பேரில் குற்றவாளிக்கு 2500 ரூபா குற்றப்பணமும் தவறின் 100 நாட்கள் கட்டாய சமூக சேவை எனவும் நீதியாளர் க. சுடர் தீர்ப்பளித்தார். துவிச்சக்கரவண்டியும் திருப்பி ஒப்படைக்கப்பட்டது- (86)

## இரண்டாமிடம்

ஹெவப்பேஜ் சிறிலங்கா முதிர்வில தவி நிலையத்தி னால் 1994 ஆம் ஆண்டில நடாத்தப்பட்ட நாடளா விய பாடசாலைகட்கு இடை யிலான கட்டுரைப் போட்டி யில் மேறபிரிவில் யா/வடம ராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி தயாளினி கந்தசாமி இரண்டாம் இடத் தைப் பெற்று பரிசாக ஆயி ரம் ரூபாவை பெற்றுக் கொண்டார். (யோ)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. நடேசு நடராஜமணி
(அதிபர் கீரிமலை நகுலேஸ்வரா ம.வி.)
படத்தடி, தெல்லிப்பளை
திதி: 19 11-1994

தோற்றம்: 29-11-1950
மறைவு. 29-11-1993

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
விளங்கிய தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஆண்டொன்று
சென்றாலும்
எங்கள் அன்பு உங்களிற்கே சமர்ப்பணம்!

- குடும்பத்தினர்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (10124)



## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன் தி. விக்னராஜசர்மா

தியாகராஜக் குருக்கள் - சுசிலாதேவி தம்பதிகளின் (கொழும்பு செட்டித்தெரு, முத்துவிநாயகர் ஆலய பிரதம குரு) செல்வப் புதல்வன் செல்வன் தி. விக்ன ராஜசர்மா தனது 1-வது பிறந்தநாளை 19-11-94 இன்று கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா பெரியண்ணா, சின்னண்ணா, கொடிகாமம் அப்பப்பா அப்பம்மா, பெரியம்மா, இந்தியா சித்தப்பா, கொக் குவில் மாமா, மாமி, மைத்துனர், கொழும்பு அம் மம்மா, மாமா, மாமி, தெனியாய பெரியப்பா பெரி யம்மா, அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்-

பிள்ளையார் கோவில், மருதடி, கொடிகாமம். திரு. V. சுப்ரமணியக்குருக்களும் பாரியார். லோகேஸ்வரி அம்மாவும் (10110)


# குறைந்த மூலதனத்துடன் செய்யக்கூடியதுவிவசாயமே

## ஆய்வுப்பட்டறையில் கருத்துரை

குறைந்த மூலதனத்துடன் செயற்படுத்தக் கூடிய தொழில் விவசாயம் என்று சாவகச்சேரிப் பிரதேச செய லர் தி பு. சுந்தரம்பிள்ளை யாழ் வளாகத்தில் கைலாச பதி கலைஅரங்கில் நடைபெ ற்றுக் கொண்டிருக்கும் அரச திணைக்களங்கள், அரச சார் பற்ற நிறுவனங்கள் இணை ந்து நடாத்தும் அனர்த்தங்க ளுக்கான அபிவிருத்தித் திட் டங்களை இனங்காணல் என்ற ஆய்வுப் பட்டறையின் முதல்நாள 1-ம் அமர்வில் விவசாயம், விலங்கு வேளா ண்மை, சூழல், கடல்வளம் என்ற தலைப்பில் தலைமை யுரையாற்றும் போது குறிப் பிட்டார்.

மேலும் அவர் தமது உரை யில், எமது மண்ணில் உள்ள தொழிலாளர்களில் 44 வீதத் தினர்விவசாயத்திலீடுபடுகின் றனர். அவர்கள் பாரம்பரிய முறையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளுகிறார்கள். இந்த விவசாயத்திற்கு மண் ணும், நீரும் முக்கிய காரணி களாக அமைகின்றன. கிடை க்கும் மழையில் 70 வீதத்தை விவசாயத்திற்கு பயன்படுத்த ப்படுகிறது. விவசாய சேவை கள் ஒழுங்கில்லாமை காரண மாக 1981-ம் ஆண்டுக்குப் பின் பயிர்ச்செய்கை மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துள் ளது எனவே யாழ் மாவட்ட த்தில் விவசாய அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசிய மாகிறது.

விவசாயத்தோடு மக்களுக் குத் தேவையான எண்ணெ ய்ப் பயிர்ச்செய்கையும் ஊக்கு விக்கப்பட வேண்டும் இந்த செய்கையை யாழ் மாவட்ட த்திற்கு வெளியே செய்வது உகந்ததாகும். இத்தோடு ஒரு முக்கிய தொழிலாக விவ சாயம் முக்கியத்துவம் பெறு கின்றது என்றும் கூறினார். இந்த நிகழ்வில் வட மாகாண விவசாய ஆராய்ச்சி நிலையப் பிரதிப் பணிப்பா ளர் கலாநிதி க. விவேகானந் தன், விவசாய புனரமைப் பும் எதிர்கால அபிவிருத்தி யும், விவசாயிகளின் தேவை களும், நங்கூரம் நிர்வாக ஆசி ரியர் திரு பொ. ஐங்கர நேசன். நிலைத்து நிற்கும் அபிவிருத்தித் திட்டங்களும், சூழல் பாதுகாப்பின் முக்கிய த்துவமும் கடற்தொழில் அபி விருத்தித் திட்ட முகாமையா ளர் திரு.செ எட்வேட் கடல் வளம், நல்லூர் உதவி பிர தேசச் செயலர் திரு- இ- இளங்கோவன் கடற்தொழில் துறைசார் புனர்நிர்மாணமும் அபிவிருத்தியும் என்னும் தலைப்புகளில் கருத்துரை வழங்கினர்-

## விண்ணப்பம ஏற்பு

(யாழ்ப்பாணம்)
நவாலி வடக்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் இன்று காலை 9- மணி முதல் மீனவர் நிவாரணத்திற்கு விண்ணப்பிப்போர் தவறாது தமது பதிவுகளை மேற்கொள் ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் (05)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 05 - 1922



மறைவு 30 - 11 - 1993

முன்னாள் திருமகள் அழுத்தக ஊழியர்
சரவணமுத்து செல்லத்துரை
திதி:- 19. 11. 1994

தந்தையே!
உந்தன் பிரிவில்
ஒருவருடம் உருண்டு சென்றது......
விந்தையே......?
நிழலாக நீங்கள்
எம் நினைவில் கலந்த பின்!

நிஜமாக உம் பிரிவு
எமை சிலையாக்கி வைத்ததன்று
ஆனால் - இன்று
அன்பும் பண்பும் நிறைந்த
உங்கள் திருவதனம்
எம்
இதயத்தில் பூஜிக்கப்படுகிறது!

செட்டிச்சோலை,
அளவெட்டி வடக்கு.
(10123)

அன்புடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# அன்றைய சுயாதீன இராச்சிய அமைப்பே இன்றைய பிரச்சினைக்கான ஒரே தீர்வு

வடக்கு பிரதேசத்துடன் சமாதானம் ஏற்படுத்திக் கொள்ளும் முகமாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளை பாராட்டலாம். அதனை வடக்கு பிரதேசமாக நாம் குறிப்பிட முனைந்தமைக்கான காரணம் மிக நீண்ட கால வரலாற்று யுகத்திலும் அவ்வாறாகவே குறிப்பிடப்பட்டிருப்பதாகும் கி.மு பல நூற்றாண்டுகளுக்கு முன் வட இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாக இலங்கை வந்த மக்கள் பிரிவினர் ஒன்றிணைந்து உருவாக்கிய சிங்கள இனம் அநுராதபுரத்தில் தம் இராச்சியத்தை கட்டியெழுப்பியதாக புராணக் கதைகளில் கூறப்படுகின்றன.

அதேசமயம் வடக்கு தேசத்தில் தமிழ் பேசும் மக்களும் நியாயமான எண்ணிக்கையில் குடியிருந்ததாக கூறப்படுவதை தர்க்கரீதியாக ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவுள்ளது. எனினும் தனியானதோர் அரச பிரதிநிதியின் கீழான ஆட்சிமுறை அங்கு இடம்பெற்றது சிறிது காலத்தின் பின் வட தேசத்தின் இராச்சியத்தை கைவிட்ட சிங்கள மக்கள் பொலநறுவை நோக்கி இடம்பெயர ஆரம்பித்தனர். எவ்வாறாயினும் கோட்டையில் 6ஆவது பராக்கிரமபாகுவின் ஆட்சியை ஆண்மிக்கும் காலத்தில் வடக்குதேசம் ஆரியசக்கரவர்த்தி எனும் தமிழ் அரசனின் ஆட்சியின் கீழ்சுதந்திரசுயாதீன இராச்சியமாக விளங்கியது அந்த அரசன் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் அச்சுறுத்தலாக இருந்துள்ளான்.

வடக்கு தேசத்தின் இந்த சுயாதீன இராச்சியம் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அவனால் அனுப்பப்பட்ட செண்பகபெருமாள் என்பவனால் சிங்கள அரசின் கேந்திர நிலையத்துடன் இணைக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. ஆறாம் பராக்கிரமபாகு மறைவினால் கோட்டே திரும்பிய சப்புமல்குமாரயா என்ற செண்பகபெருமாள் பிரதான இராச்சியத்தை கைப்பற்றி 6ஆம் புவனேகபாகு என்ற பெயரில் விளங்கினான்.

அவனின் அரசபதவிப் பிரமாணத்திற்கு எதிராக ருகுணை மற்றும் மலையக பிரதேச சிங்கள தலைவர்கள் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியை அடக்க புவனேகபாகு முயன்று கொண்டிருந்த சமயம் வடக்கு பிரதேசத்தில் தனது அதிகாரியின் தலைமையின் கீழ் சுயாதீன ஆட்சியை ஆரம்பித்தான் 1470 முதல் 1478 காலகட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. 1591 வரையிலான 112வருட காலப் பகுதியில் 12 தமிழ் அரசர்கள் யாழ்ப்பாண சுயாதீன ராச்சியத்தை ஆண்டுள்ளனர்.

போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டபின் அந்த அரசபரம்பரை முடிவு கண்டது. போர்த்துக்கேயரும் அதனை தனியானதோர் பிரிவாகவே ஆட்சி செய்தனர்.

அதன்பின் 1658 இல் ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உட்பட்ட யாழ்ப்பாணம் 137 ஆண்டு காலம் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1795 இன் இறுதிப் பகுதியில் பிரித்தானியர்கள் யாழ்ப்பாணத்தையும், 1796 இல் கொழும்பையும், 1815இல் மலையக இராச்சியத்தையும் கைப்பற்றினர்.

சுமார் 348 ஆண்டுகளுக்கு பின்னர் வெளிநாட்டு ஆட்சியின் கீழ் இலங்கை மீண்டும் ஒன்றிணைந்தது. எமது இனவாதிகள் சிலர் இதனை செவிமடுப்பதற்கு விரும்பாதபோதிலும் வரலாற்று ரீதியிலாக சம்பவங்களைக் கவனத்திற் கொள்ளும்போது இலங்கை ஒற்றையாட்சி ராச்சியமாக உருவாகியது பிரித்தானிய ஆட்சியின் கீழாகும் எனக் குறிப்பிட வேண்டியுள்ளது.

இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு பிரித்தானியர்களின் கைகளில் பொறுப்பேற்படுவதற்கு முன் கீழ்நாட்டுச் சிங்களப் பிரதேசம், மலைநாட்டுச் சிங்களப் பிரதேசம் என சிங்களவர்களில் இரு பிரிவுகள் இருந்துள்ளன. இதனுடன் நோக்கும்போது யாழ் பிரதேச மக்கள் நீண்டகாலமாக தமது இனத்துவ கருத்திற்கேற்ப சுயாதீன கோட்பாடுடன் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

வடக்கில் இன்று நிலவுவது பயங்கரவாதமே. எனவே அதை அடக்க வேண்டும் என கூறும் பிரிவினர் உள்ளனர். ஆச்சரியத்திற்குரிய விடயம் என்னவெனில் இக்கொள்கையை கொண்டிருப்பவர்கள் அண்மையில் சிங்களப் பிரதேசங்களில் நிலவிய பயங்கரவாதத்தின் பங்குதாரர்களாகவும், அதற்கு ஆதரவு வழங்கியவர்களாகவும் இருப்பதாகும்.

சிங்களப்பிரதேசத்தின் பயங்கரவாதத்தை குறுகிய காலத்தினுள் அரசாங்கம் திறமையுடன் கட்டுப்படுத்தியது அந்த பயங்கரவாதத்தின் உண்மையான குறிக்கோள் என்ன? அதனை சுலபமாக எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? போன்ற விடயங்களை தனியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

எவ்வாறாயினும் சிங்களப் பிரதேசங்களில் நிலவிய பயங்கரவாதம் அடக்கி ஒடுக்கப்பட்ட பின்னர் அதற்கான காரணங்களை ஆராய்வதற்கென ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இளைஞர்களுக்கும் அரசியல் தலைமைத்துவத்துக்கு பிரவேசிக்கும் ஆவலை பூர்த்தி செய்துகொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

வடபகுதியின் பிரச்சினை தொடர்பாகவும் அவ்வாறு ஆராயப்பட வேண்டியுள்ளது இளைஞன் தமிழனோ சிங்களவனோ யாராக இருந்த போதிலும் ஒரு இளைஞனாவான். எனவே வடக்கின் பிரச்சினைக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளைச்சேர்ந்த இளைஞர்களின் அமைதியின்மைக்கான காரணங்களிக்கு ஒன்றாக இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் வடக்குப்பிரச்சினை நீண்ட காலமாகத் தொடர்வதற்கு அதன் அடிப்படை சக்திமிக்க ஒன்றின்மீது அமைந்திருப்பது காரணியாக அமைந்துள்ளது. இனத்துவ ரீதியான கோட்பாடு அதன் காரணியாகும். இங்கு ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கும் வரலாற்றுக் குறிப்புகள் அதனை ஊர்ஜிதம் செய்துள்ளன. சிங்கள இனவாதிகள் சிலர் இதனை ஏற்றுக் கொள்வதில்லை.

> இலங்கையில் இன்றைய முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இனப்பிரச்சினை உள்ளது. இதன் வரலாறு குறித்து ராவய பத்திரிகையில் லயனல் சரத் என்பவர் எழுதிய கட்டுரையை இங்கு தருகின்றோம்.

இனரீதியாக சிந்திக்கும் உரிமை சிங்களவர்களுக்கு மட்டுமே உண்டு என அவர்கள் எண்ணுகின்றனர். சிங்களவர்களை விட தமது இறைமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தமிழ்மக்கள் முயன்றுள்ளார்கள் என்பது அவர்கள் இன்று வரையில் மதித்து வரும் தேசவழமை சட்ட முறைகளின் மூலம் தெளிவாகின்றது. அதற்கேற்ப வெளிபாரினால் யாழ்ப்பாணத்தில் காணிகளை விலைக்கு வாங்க முடியாதுள்ளது என எமது இனவாதிகள் குற்றச்செயலாக கூறி வருகின்றனர். எந்த வெளிநாட்டவர்க்கும் காணி பூமிகள் மட்டுமன்றி மனைவி மக்களைக் கூட விற்பனை செய்வதற்கு தயாராக இருக்கும் இந்தக் கீழான இனவாதிகளைப் போன்றவர்களுக்கு அது ஒரு குற்றமாகத் தென்படுவது ஆச்சரியமல்ல.

இந்தப்பிரச்சினையை புத்திசாலித்தனத்துடனும் பக்கசார்பின்றியும் நோக்க வேண்டும். வடக்கின் பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்கென அனுப்பப்படும் ஆயுதப்படையினர் சிங்கள இனப்பிரிவைச்சார்ந்தது அவர்களை உற்சாகப்படுத்தும் முகமாக பாடப்படும் பாடல்கள் இன உணர்வை தூண்டக்கூடிய பாடல்களாகும் தாய் நாட்டைகாப்பாற்றவேண்டும் என்பது போர் வாசகமாகும். யாரிடமிருந்து? தமிழர்களிடமிருந்து- செல்வது சிங்களப் பிரதேசங்களில் இருந்து காப்பாற்றிக் கொள்ளச் செல்லும் தாயகத்தை' கண்களால் முதல் முதலில் காண்பது கூட அங்கு சென்ற பின்னரே அது இந்தப் பக்கமாகும்.

இந்த நிலையின் கீழ் மறுபக்கமும் அதற்கு முகம் கொடுத்திருக்கின்றனர். அவர்கள் தமிழ்ப் புலிகள் தம்மைக் கட்டுப்படுத்த வரும்பாதுகாப்புப் படையுடன் அவர்கள் போரிடுகின்றனர். அது அவர்கள் காலம் காலமாக வாழ்ந்திருக்கும் தாயகமாகும். அவர்களும் உற்சாக சுலோகங்களையும் இனப்பற்றை ஏற்படுத்தும் பாடல்களையும் பாடுகின்றனர். அவர்கள் சிங்கள பயங்கரவாதிகளை விட வித்தியாசமானவர்கள்.

சிங்களப் பயங்கரவாதிகள் மறைந்திருந்து குண்டுகளை வெடிக்கச் செய்தனர் எனினும் இந்த தமிழ்ப் புலிகள் கொன்றுவிட்டு தற்கொலை செய்து கொள்ளும் நோக்குடையவர்கள். உண்மையில் அவர்கள் அவ்வாறு செய்வது இனப்பற்று காரணமாகவே இன்று தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது: இந்த இனப்பிரச்சினையாகும். அவர்கள் சுயாதீனத்தை ஏற்றுக் கொண்டால் மட்டுமே அதனைச் செய்ய முடியும். எவ்வாறாயினும் வடக்கின் தமிழீழ மக்கள் சிலகாலங்களுக்கு முன்னர் போன்று ஐக்கிய இலங்கையின் கீழ் இருப்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிராகரிக்க மாட்டார்கள்.

பிரதான ஆட்சி சபையினுள் தமிழர்களின் உரிமை பறிக்கப்பட்டுள்ளமை மேற்குறிப்பிட்ட இனப் பாகுபாடு சிந்தனை வளர்வதற்கான காரணமாக அமைந்துள்ளது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் இந்த நாட்டுக்கு சுதந்திரத்தைக் கற்றுக் கொடுப்பதற்கு ஆலோசனை செய்தசந்தர்ப்பத்தின்போதே தமிழ் மக்கள் பெரும்பான்மையின சிங்கள மக்கள் மீது சந்தேகம் கொண்டனர், 1936 இல் தேசிய மந்திரிசபை ஒன்றை அமைத்து சிறுபான்மையினர் அதில் பிரவேசிக்கும் சந்தர்ப்பங்கள் சிங்கள அரசியல் தலைவர்களினால் தடுக்கப்பட்டன. சோல்பரி ஆணைக் குழுவின் அறிக்கை இந்த விடயத்தை தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளது.

எவ்வாறாயினும் அரசியல் வாதியான மறைந்த பண்டாரநாயக்க அதுவரை காலமும் இடம்பெற்று வந்த தீர்க்க தரிசனமற்ற செயல் வடிவத்தை மாற்றி அமைக்க முயன்றார். 1958 இல் தேசிய சபை சட்டத்தை முன்வைப்பதன் மூலமாக மேற்கொள்ளப்பட்ட அந்த முயற்சி பிக்குகளின் எதிர்ப்பினால் இடைநிறுத்தப்பட்டது. அந்த சட்ட மூலத்தை அன்று அவ்வாறு அவர் கிழித்தெறிந்தது காவி உடைக்கு மதிப்பளிக்கும் வகையில் அன்றி காவி உடையூடாக முன்வைக்கப்பட்ட முட்டாள் தனமான கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அல்ல.

இப்பொழுது நாம் மீண்டும் ஒரு 6வது பராக்கிரமபாகு யுத்தத்துக்கு வந்து விட்டோம் என்றே எண்ணத் தோன்றுகின்றது: அன்று வடக்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே தலைநகருடன் இணைத்தது தமிழ் ஆட்சியாளரின் கீழான பிரதேச சுயாதீன இராச்சியத்தை அமைத்ததன் மூலமாகவே. அன்று செய்ததை நிகழ்கால அரசியல் கோட்பாட்டுக்கு ஏற்ப செயற்படுத்துவது இந்த பிரச்சினைக்கான ஒரே தீர்வாகும்.

# இந்திய எதிர்ப்பு கம்யூனிஸ்ட்டுகள் நேபாளத்தில் அரசமைக்க வாய்ப்பு

ஆசியாவின் இரு பெரும் நாடுகளான சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் கேந்திர நிலையில் அமைந்துள்ளதும் 20 மில்லியன் சனத்தொகையைக் கொண்டதுமான நேபாளம் அரசியல் உறுதியற்ற தன்மையை நோக்கி இப்போது சென்று கொண்டிருக்கிறது.

கடந்த ஜூலையில் ஆளும் நேபாள காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட கோஷ்டி மோதலினால் மூன்று ஆண்டுகளுக்கு முன் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இந்திய சார்பு பிரதமர் ஜி பி. கொய்ராலாவின் அரசு கவிழ்ந்தது.

நேபாளத்தில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான ஒரு மறைமுகப் போராட்டமாகும். திபெத்துடன் நீண்டதும் உணர்ச்சிகரமானதுமான ஒரு எல்லையை நேபாளம் கொண்டிருப்பதால் சீனா காட்மண்டுவில் மிகவும் சுறுசுறுப்பாக உள்ளது. இப்பிராந்தியத்தில் தமது அரசியல் கேந்திர முக்கியத்துவ நலன்களை மேம்படுத்த கம்யூனிஸ்ட் அல்லது கம்யூனிஸ்ட் ஆதரவு அரசாங்கம் ஒன்றை சீனர் விரும்புவர்.

இந்தியாவும் நேபாளத்தில் பெரும் பிரசன்னம் ஒன்றை கொண்டுள்ளது: நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே பிரயாண கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாததால் இலட்சக்கணக்கான நேபாளிகள் இந்தியாவில் தொழில் புரிகின்றனர். இந்தியாவை எதிர்க்கும் கம்யூனிஸ்ட் கட்சி நேபாளத்தில் அரசு அமைப்பதை இந்தியா விரும்பாது.

1991 இல் மூன்று தசாப்தங்களாக நீடித்த மன்னர் ஆட்சியை பலகட்சி பொதுத்தேர்தல் நடைபெற்றது 205 ஆசனம் கொண்ட பாராளுமன்றில் 110 ஆசனங்களை கைப்பற்றிய இந்திய ஆதரவுபெற்ற நேபாள காங்கிரஸ் ஆட்சியமைத்தது. அன்று எதிர்க்கட்சியான கம்யூனிஸ்ட்கட்சி 68 ஆசனங்களை பெற்று பிரதான எதிர்க்கட்சியானது ஏனைய மூன்று கம்யூனிஸ்ட் கட்சி பிரிவுகள மேலும் 13 ஆசனங்களைப் பெற்றன. மொத்த கம்யூனிஸ்ட் வாக்குகள் 1991 - ஆம் ஆண்டில் 36 73 சதவீதமாக இருந்தன இது நேபாள காங்கிரசின் பலத்தை விட ஒருசதவீதமே குறைவானதாகும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளரும் இந்திய ஆதரவாளருமான பிரதமர் கொய்ராலா கம்யூனிஸ்ட் செல்வாக்கை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

கடந்த ஆண்டு நேபாளத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் தலைநகர் காட்மண்டுவில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிபெற்றது இங்கு வேட்பாளராக நின்ற முன்னாள் பிரதமரும் நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவருமான கே. பி. பட்டாராய் தோற்கடிக்கப்பட்டார் தனது தோல்விக்கு பிரதமர் கொய்ராலா பங்கு வகித்ததாக பட்டராய் குற்றஞ்சாட்டினார். இது நேபாள காங்கிரசில் பிளவை ஏற்படுத்தி இறுதியில் அரசையே கவிழவைத்து இன்றைய தேர்தலுக்கும் வழி செய்தது.

பிரதமர் கொய்ராலாவின் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக அவரை ஆட்டம் காணச் செய்ய கம்யூனிஸ்ட்டுகள் விரும்பினர் பட்டராய் பிரதமராக இருந்த போது அவருடன் உறவை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர். பிரதமர் கொய்ராலாவை பதவியிலிருந்து இறக்கி அவரது இடத்திற்கு பட்டராயை அமர்த்தும் நோக்கில் கடந்த ஆண்டு கம்யூனிஸ்ட்டுகள் கிளர்ச்சியை நடத்திய போதும், அது வெற்றியளிக்கவில்லை.

கடந்த ஜூலையில் நேபாள காங்கிரஸின் 36 எம்.பிகள் பட்டராய்க்கு விசுவாசம் தெரிவித்து முக்கிய வாக்கெடுப்பு ஒன்றில ஒதுங்கி இருந்தபோது கம்யூனிஸ்ட்டுகளின் முயற்சிக்கு பலன் கிடைத்தது. கொய்ராலாவின் அரசு உயிர் வாழ இந்த வாக்கெடுப்பிலேயே தங்கியிருந்தது. 86க்கு 74 வாக்குகள் என்ற ரீதியில் அரசு தோல்வியடைந்தது. பிரதமர்கொய்ராலாவின் பதவிவிலகலையடுத்து பாராளுமன்றில் இரண்டாவது பெரிய கட்சியான கம்யூனிஸ்ட்கட்சியை புதிய அரசு அமைக்க மன்னர் அழைப்பார் என கம்யூனிஸ்ட்டுகள் எதிர்பார்த்தனர்.

ஆனால் இவ்வாறு அழைப்பதற்கு மாறாக மன்னர் பிரேந்திரா பாராளுமன்றத்தை கலைத்து நவம்பர் 13ல் தேர்தல் நடத்த உத்தரவிட்டார்: இப்போது தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கும் நிலையில் இந்திய எதிர்ப்பு கம்யூனிஸ்ட் தனிப்பெரும் கட்சியாக வெற்றியை நோக்கி செல்கின்றது. தமக்கு பெரும்பான்மை பலம் கிடைக்காவிடின் ஏனைய கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டுடன் தாம் அரசமைக்கவுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது. ஆளும் கட்சியான நேபாள காங்கிரசிற்கு தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இது கட்சியை மேலும் பிளவுபடுத்துமா என்பதற்கு எதிர்காலமே பதில் சொல்லும்.

## நேபாள தேர்தலில் கம்யூனிஸ்ட்கட்சி முன்னணி

(காட்மண்டு)

நேபாளத்தில் நடைபெற்ற தேர்தல்களில்கம்யூனிஸ்ட் கட்சிமுன்னணியில் இருந்து வருவதாக பூர்வாங்க வாக்கு எண்ணிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது இதுவரை அறிவிக்கப்பட்ட 131 முடிவுகளில் 64 தொகுதிகளில்கம்யூனிஸ்ட்கட்சி வெற்றி பெற்றுள்ளது இதே வேளை ஆளும் நேபாளிய காங்கிரஸ் கட்சி 46 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி (யூ. எம். எல்.) பல தொகுதிகளில் முன்னணி வகிப்பதால் அது தனிப்பெரும் கட்சியாக வெற்றிப்படியில் உள்ளது.

## அங்கோலா அரச படைகள் யுத்த நிறுத்தத்தை மீறல்

(லுசாக்கா)

அங்கோலா அரசாங்கத் துருப்புக்கள் யுத்த நிறுத்த உடன்பாடுகளை மீறி வருவதாக யூனிட்டா கிளர்ச்சி இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது. உத்தியோக பூர்வமாக யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாவதை இத்தகைய நடவடிக்கைகள் தாமதப் படுத்தும் எனவும் யூனிட்டா இயக்கம் எச்சரிக்கை செய்துள்ளது.

யூனிட்டா இயக்கத்தின் இவ் எச்சரிக்கையை தொடர்ந்துயூனிட்டா இயக்கம் சமாதான பேச்சுக்களில்கலந்துகொள்ளுமா என்பது குறித்து சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# அண்ணாவின் குறிப்பை நீக்கி சேஷனின் நூல் வெளியீடு

(சென்னை)

சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்படி சேஷனின் புத்தகத்தில் உள்ள சர்ச்சைக்குரிய பக்கங்கள் நீக்கப்பட்டு திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இதில் அறிஞர் அண்ணாத்துரையை இழிவு படுத்தும் கருத்துகள் நீக்கப்பட்டுள்ளன.

இந்திய தேர்தல் ஆணையாளர் சேஷனின் வாழ்க்கை வரலாற்றை கோவிந்தன்குட்டி என்பவர் புத்தகமாக எழுதியுள்ளார் சேஷன் உள்ளார்ந்த கதை என்ற இந்த புத்தகத்தில் தமிழக முன்னாள் முதல்வர் அண்ணா பற்றி ஆட்சேபகரமான கருத்துக்களை கூறியிருந்தார். திராவிடக்கட்சிகள் இதை எதிர்த்தன சேஷனை மன்னிப்பு கோரும்படி கேட்டன. இந்நூல் விற்பனையை தடைசெய்த தமிழக அ.தி.மு.க அரசு உயர் நீதிமன்றத்திலிருந்து அனுமதியை பெற்றுக் கொண்டது.

# அயர்லாந்து பிரதமர் ரெனோல்ட் பதவி இராஜினாமா

(டப்ளின்)

ஐரிஷ் குடியரசின் பிரதமர் அல்பேட் ரெனோல்ட் தமது பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார். இவரது ராஜினாமாவுக்கு கூட்டு அரசில் ஏற்பட்ட பிளவே காரணம் எனக் கூறப்படுகிறது. தமது ராஜினாமா பற்றி பாராளுமன்றத்தில் அறிவித்த அவர். ஜனாதிபதியிடம் பாராளுமன்றத் தேர்தலை குறித்த காலத்திற்கு முன்பே நடத்தும்படி சிபாரிசு செய்வாரா என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை ஐரிஷ் அரசியல் அமைப்பின் படி ஜனாதிபதி றொபின்சன் எதிர்க்கட்சியினரை ஆட்சி அமைக்கும்படி கோருவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது.

வட அயர்லாந்து பிரச்சினையில் சமாதானம் ஏற்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் அரசைக் கவிழ்க்க முயல வேண்டாம் என்று பிரதமர் ரெனோல்ட் அரசில் அங்கம் வகிக்கும் தொழிற்கட்சியிடம் விநயமாகக் கேட்டிருந்தார். எனினும், சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம் செய்த மதகுரு ஒருவர் தொடர்ந்து அயர்லாந்தில் வசிக்க அனுமதிக்கப்பட்டதை ஆட்சேபித்து தொழிற்கட்சி அரசு தனது ஆதரவை விலத்திக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

# என்றாவது ஒருநாள் சதாம் சர்வதேச அங்கீகாரம்பெறுவார்

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசையின் என்றாவது ஒருநாள் சர்வதேச சமுதாயத்தின் முழுமையான அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளப்படுவார் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கொஸிரேவ் வானொலிப்பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அமெரிக்கா தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி சர்வதேச விவகாரங்களில் எப்போதும் ஒரே நிலையை கடைப்பிடிக்கக்கூடாது என்பதை உணரும் என கருதுகிறேன். பி. எல். ஓ. தலைவர் அரபாத் இதற்கு உதாரணம் 1989-இல் அமெரிக்கா விரும்பாததால் ஐ. நா. பொதுச் சபை கூட்டத்தில் அவரால் கலந்து கொள்ளமுடியவில்லை 5 ஆண்டுகளின் பின் இப்போது அரபாத் கிளின்டனால் வரவேற்கப்படுகின்றார் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

## எலிசபெத்தின் தாயாரை "கொன்ற" பி. பி. ஸி.

(லண்டன்)

இங்கிலாந்து மகாராணி எலிசபெத்தின் தாயார் இறந்து போய்விட்டதாக தவறுதலாக ஒலிபரப்பப்பட்ட செய்தி குறித்து பி. பி. சி. மன்னிப்புக் கோரியுள்ளது.

ராணி எலிசபெத்தின் 94 வயது தாயார் இறந்து போய் விட்டதாக பி. பி. சி அண்மையில் செய்தியொன்றை ஒலிபரப்பியது. இதையடுத்து பக்கிங்காம் அரண்மனைக்கும் தாயாரின் உத்தியோக பூர்வ இல்லத்துக்கும் ஏராளமான தொலைபேசி அழைப்புகள் வந்தன.

### சிந்தனைக்கு

வெளிப்படையான போரை விட வஞ்சகமான சமாதானம் கேடு விளைவிக்கும்.

- பே. லிட்டஸ்

ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-11-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 8024
தபால் பெட்டி எண் - 05

# அரசாங்கம் தடம்புரளுகிறது?

'மனமுண்டானால் இடமுண்டு' சிறிலங்கா அரசாங்கமோ அன்றி இராணுவமோ இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் என எண்ணும் பட்சத்திலேயே, அதாவது மனதார விரும்பும் பட்சத்திலேயே இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியிலான தீர்வைக் காண முடியும்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தினதோ அன்றி இராணுவத்தினதோ நடவடிக்கையில் அவ்வாறான மனப்பாங்கு வெளிப்படுவதாக இல்லை. மாறாக சமாதானத் தீர்வு தொடர்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் கொடுக்கும் நல்லெண்ண சமிக்கைகளைக் கடந்த அரசு போன்று புறக்கணிப்பவையாகவே தெரிகிறது.

சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் பதவி ஏற்பதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்த போர் இடைநிறுத்தத்திற்கும் அவ்வாறானதொரு நிலையே ஏற்பட்டுள்ளது. போர் இடைநிறுத்தம் தொடர்பாக விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசிற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்பது சரிதான். ஆனால் அது கூட சந்திரிகா அரசு தனது பெருந்தன்மையை எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதை மதிப்பீடு செய்யும் ஓர் சந்தர்ப்பத்தையே வழங்கியுள்ளது எனலாம்.

ஆனால், விடுதலைப் புலிகளின் இப் பெருந்தன்மையை அரசாங்கம் வழமையான தனது அரசியல் பாணியில்நின்று கொண்டு நழுவவிடப் பார்க்கின்றது: விடுதலைப்புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை எனச்சாட்டுக் கூறி அதற்குள் மறைந்து கொள்ள எண்ணுகிறது,

ஆனால் இது அப்பட்டமான இரட்டை வேடம் என்பதை உலகத்தால் தெளிவாகவே புரிந்து கொள்ள முடியும். அரசாங்கத்தின் இந்நழுவலானது கண்ணாடிக் கூண்டுக்குள் ஒளித்துக் கொள்ள இடம் தேடும் முயற்சிக்கு ஒத்ததாகும்.

மேலும் அரசாங்கம் யுத்தநிறுத்தம் என்று அறிவித்துவிட்டாலும் கூட தனது இராணுவ நடவடிக்கைகளை குறைக்கவோ அன்றி இடைநிறுத்தவோ இல்லை. இராணுவம் தனது வழமையான நடவடிக்கைகளை மேற்கொண்டே வருகின்றது. இதில் பல பொதுமக்களும், போராளிகளும் மரணமடைந்தும் உள்ளனர்.

இந்த வகையில் விடுதலைப்புலிகள் போர் இடைநிறுத்தம் அறிவித்த கடந்த ஆறு நாட்களுக்குள் சிறிலங்காவின் முப்படைகளுமே தாக்குதலை நடத்தியுள்ளன. கடற்படை வடமராட்சியிலும், இராணுவம் முல்லைத்தீவு, மட்டக்களப்பு எனப்பல இடங்களிலும் விமானப்படை யாழ் குடாநாட்டிலும் தாக்கியுள்ளமை சில உதாரணங்களாகும். இவற்றுள் லெப், கேணல் மல்லி கொல்லப்பட்டமையும் அவரின் தலையை இராணுவம் வெட்டிச் சென்றமையும் சமாதானத்திற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

ஆனால் இத்தாக்குதல்களை எப்படைப் பிரிவுகள் செய்கின்றன என்பதல்ல இங்கு முக்கியம் சமாதானத்திற்கான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன என்பதே முதன்மையானதாகும். ஆனால் இதற்கு இராணுவமோ மற்றும் ஆயுதப்படையினரோ பொறுப்பு என அரசாங்கம் விளக்கம் கூறிவிட முடியாது. இதற்கு அரசாங்கமே முழுப் பொறுப்புமாகும்:

இது குறித்து இராணுவம் ஏற்கனவே தப்பித்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளது. அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்த போர் இடைநிறுத்தம் பற்றி எதுவித தகவலும் அறிவிக்காமையினால் 'இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன எனத் தெரிவித்துள்ளது இது ஒரு வகையில் அரசாங்கத்தின் தரப்பின் நிலைப்பாட்டைக்காட்டுவதாக இருக்கும் அதேவேளை, இராணுவத்தின் மனப்பான்மையையும் காட்டுவதாகவுள்ளது.

இந்த வகையில் விடுதலைப்புலிகளின் நல்லெண்ண சமிக்கைக்கு அரசாங்கம் காட்டிவரும் புறக்கணிப்பு சமாதானத்தீர்வில் அதுகொண்டுள்ள நம்பகரத்தன்மையை கேள்விக்குரியதாக்கியுள்ளது. இது சமாதானத்திற்கான சூழ்நிலையைக் கெடுத்து இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் முயற்சிக்குப் பெரும் தடைக்கற்களாக உருவாகலாம். அவ்வேளையில் அரசாங்கம் எவரையும் குறை கூறுவதில் அர்த்தம் இல்லாது போகும்.

# பசுந்தாட் பசளை பிரயோகம் விளைச்சலை அதிகரிக்கிறது

## திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு

பசுந்தாட் பசளை என்று கூறும் போது சணல், பூவரசு, காவிளாய், வேம்பு, கிளைக்கிளுவை மற்றும் சில அவரை இனப்பயிர்களும் அடங்கும். இவற்றுள் காவிளாய், பூவரசமிலை, வேப்பிலை மற்றும் கிளைக்கிளுவை இலை, குழைகள் போன்றவற்றை வேறு இடங்களிலிருந்து சேகரித்துக் கொண்டு வந்து பயிர் செய்யுமிடத்தில் புதைத்து பயிர் செய்வதுண்டு. இவ்வகையான சேதனப் பசளைகள் மண்ணில் காற்றோட்டத்தையும், வேர் உட்புகும் தன்மையையும் கிட்டுகின்றது. அத்துடன் கனிப்பொருட்களையும் பயிருக்குத் தொடர்ச்சியாக கிடைக்க வழி செய்கின்றன. மேலும் நுண்ணுயிர்களின் தொழிற்பாட்டையும் அதிகரித்து சேதனப் பசளை பிரிகையடைந்து பயிர்களுக்குத் தேவையான முக்கிய பயிர்ப் போசணைகளையும் அதிகரிக்கச் செய்வதுடன் மண்ணில் ஈரலிப்பை வைத்திருக்கவும் உதவுகிறது.

மாற்று முறையாக பயிர் செய்யும் இடங்களில் பசுந்தாட் பயிரை (சணல், கௌப்பி, செஸ்பேனியா பயிரிட்டு சுமார் 50 சதவீதம் பூக்கள் தோன்றியிருக்கின்ற பருவத்தில் புதைத்து 2-3 வாரங்கள் கழிந்த பின்னர் பயிரை நாட்டலாம். இச்சமயத்தில் காபன், நைதரசன் விதம் திருப்தியாக இருக்கின்றது இவ்வகையான தாவர வேர்கள் முடிச்சுக்களில் இரைசோபியம் என்னும் பற்றீரியாவினால் நைதரசன் பதிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து மண்ணின் வளம் அதிகரிக்கின்றது.

திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்தில் வெங்காயப் பயிரில் செய்யப்பட்ட ஆய்வுகள் பசுந்தாட் பசளை இடுவதன் மூலம் பெரு விளைவைப் பெற முடியும என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஹெக்ரேயருக்கு 7 தொன் பசுந்தாட் பசளை இடப்பட்ட போது 16 மெற்றிக் தொன் விளைவு கிடைத்துள்ளது. எதுவித பசளைகளும் இடப்படாத போது 13 மெற்றிக்தொன் விளைவுதான் கிடைத்துள்ளது. சிபார்சுக்கமைய அசேதனப் பசளை (உரம்) இடப்பட்ட சணல் இடப்பட்ட போது ஆகக்கூடிய விளைச்சலான 19.2 மெற்றிக்தொன் விளைவு கிடைத்துள்ளது.

# மீனவர்களுக்கான ஓய்வூதியம் நடைமுறைப்படுத்த திட்டம்

(கொழும்பு)

மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மீன்பிடிக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள 1 லட்சத்து 10 ஆயிரம் பேர் இத்திட்டத்தினால் நன்மையடைவர் என்று கடற்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

60 வயது கடந்த மீனவர்கள் ஓய்வூதியம் பெறத்தகுதியுடையவர்கள்; 18 வயதிற்கு கூடியவர்களும் 59 வயதுக்குட்பட்டவர்களுமான மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியும். 18 வயது அடைந்த ஒருவர் தவணைப்பணமாக 65 ரூபாவை செலுத்த வேண்டும். அவர் 59 வயதை அடையும் வரை இந்தப்பணம் அறவிடப்படும். ஓய்வு பெறும்போது அவர் மாதந்தோறும் 4215 ரூபாவை ஓய்வூதியமாகப் பெறுவார்.

60 வயதைப் பூர்த்தி செய்ய முன்னர் மீனவர் ஒருவர் பலவீனமடைந்தால் அல்லது உயிரிழந்தால் அல்லது திடீர் விபத்துக்கு ஆளானால் அவர் செலுத்தியுள்ள தவணைப் பணத்திற்கு ஏற்றவாறு ஓய்வூதியம் கணிக்கப்படும்.

ஓய்வூதிய திட்டத்தில் சேர்ந்து கொண்ட காலம் செலுத்திய தொகை என்பனவற்றிற்கு ஏற்ப ஓய்வூதியம் வித்தியாசப்படும் என அமைச்சு கூறுகிறது 19 வயதை அடைந்த மீனவர் 68 ரூபாவையும் 20 வயதை அடைந்த மீனவர் 70 ரூபாவையும் 40 வயதில் இத்திட்டத்தில் சேரும் மீனவர் 153 ரூபாவையும் தவணைப் பணமாக செலுத்த வேண்டும்.

# இலங்கை அகதிகள் எனக்கூறி சலுகை பெறும் இந்தியர்

## ஜேர்மனியில் நடக்கிறதாம்

(யாழ்ப்பாணம்)

மேற்கத்தைய நாடுகளில் இலங்கைத்தமிழர்கள் போல் நடித்து வேறுநாட்டவர்கள் அகதி சலுகைகளை பெற்றுக் கொள்வதாக ஜேர்மனியில் இருந்து அண்மையில் கிடைத்த தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

மேற்குலக நாடுகளில் இலங்கைத்தமிழர்களிற்கு வழங்கப்படும் அகதி சலுகைகளை தாமும் பெற்றுகொள்வதற்காக வேறு நாட்டவர்கள் குறிப்பாக இந்தியர்கள் தங்களை இலங்கைத்தமிழர்களாக காட்டிக்கொண்டுள்ளனர் இவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சிலருடன் ஒன்றாக புகைப்படம் எடுத்து அவர்களை தமது உறவினர்கள் எனகூறி தமது நாடகத்தை நியாயப்படுத்தியும் வருகின்றனர் இவர்கள் தங்களின் சொந்த இடங்களாக யாழ்ப்பாணத்தில் உள்ள சில இடங்களை கூறிவருகின்றனர் இப்படியானவர்களை கண்டுபிடிப்பது மேற்குலக அதிகாரிகளிற்கு பெரும் சிரமமாக இருப்பதாக அந்ததகவல் மேலும் தெரிவிக்கின்றது. [இ]

# ஆய்வுகூட கப்பல் மூலம் திருமலை கடலில் ஆய்வு

(திருகோணமலை)

திருகோணமலை கடலில் நாரா நிறுவனம் தற்போது கடல் வாழ் உயிரகள் மற்றும் வளங்கள் குறித்து ஆய்வு நடத்தி வருகிறது. இந்நிறுவனத்தின் ஆய்வுகூட வசதியுள்ள கப்பலான 'சமுத்திர மாறு' இந்த ஆராய்ச்சியை மேற்கொள்கின்றது.

இதற்கென உபகரணங்களை யூ. என். டி. எச். சி நிறுவனம் வழங்கியுள்ளது. மீன்பிடிப்பு இடங்கள், கடல்நீர் சுழியோட்டம் மற்றும் வளங்கள் திரட்டப்படுகின்றன. இந்த ஆய்வு மூலம் பெறப்படும் தகவல்கள் கடற்றொழில் விருத்திக்கு பயன் படுத்தப்படவுள்ளன.

# இரணவில வானொலி நிலையம்; அரசுடன் அமெரிக்கா பேச்சு

(கொழும்பு)

புத்தளம் மாவட்டம் இரணவில பகுதியில் 2.8 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் அமெரிக்க வானொலியின் அஞ்சல் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த அக்டோபர் 4ம் திகதியன்று இப்பகுதி மக்கள் நடத்திய ஆட்சேபக ஊர்வலத்தின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் உயிரிழந்ததும், நால்வர் படுகாயம் அடைந்தது மான சம்பவத்தின் பின்னர் கட்டுமாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

இச் சம்பவத்தில் பொலிசாரின் அணுகுமுறையைக் கண்டித்த அரசு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரன்தெனியா பொலிஸ் அதிபர் பி.எம் பிரேமரத்னா ஆகியோரை அப்பிரதேசத்திலிருந்து உடனடியாக இடமாற்றம் செய்ததும் குறிப்பிடத்தக்கது

இவ் அஞ்சல் நிலையத்தின் கட்டுமாணப்பணிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் எனினும் இக் கட்டுமாணங்கள் எப்போது மீண்டும் ஆரம்பிப்பது என்பது தொடர்பாக இன்னும் இணக்கம் காணப்படவில்லை என்றும் கூறப்படுகிறது

# சங்கானை பாடசாலை அபிவிருத்திக்கு நிதியுதவி

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்டத்தை சேர்ந்த பாடசாலைகள் சிலவற்றில் பலகாலம் திருத்தமின்றி காணப்பட்ட மலசல கூடங்களை திருத்தியமைப்பதற்கான நிதி கல்வித் திணைக்களத்தினரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றின் திருத்த வேலைகளை தொடர்வதற்கான அனுமதியும் வழங்கியுள்ளது-

இவற்றின் உடனடியாக திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கென அனுமதி வழங்கப்பட்டுள்ள பாடசாலைகள் விபரம் வருமாறு -வட்டு மேற்கு அ-மி-த-க பாடசாலை, அராலி இந்துக் கல்லூரி பண்ணாகம் மெய்கண்டான், அராலிவடக்கு அ-மி-த-க-பா, துணவி அமிதக, தொல்புரம் அ-மி-த-க.பா, வட்டு இந்து. சுழிபுரம் ஐ-ச- பா, வட்டு கார்த்திகேய வித்தி வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை- (41)

# வானொலி - 4 இற்கான போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

புலிகளின்குரல் வானொலி நான்காம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம்:

நாடகம் முதலாமிடம் - 'எல்லை' - செல்வி ந. லோகேஸ்வரி, திருநெல்வேலி
இரண்டாமிடம் 'முகாரி' - நாக. தயாகரன் சந்தர்மடம்
மூன்றாமிடம்- 'தெளிவு' - ப. உதயகுமார் அளவெட்டி,
சிறுகதை முதலாமிடம் - த. சங்கீதன் லெப். கேணல் நவம் அறிவு கூடம்
இரண்டாமிடம் - 'விழிகள்... புதைகுழிகள்'' செல்வி. ச. பிரேமினி சங்கத்தானை.
மூன்றாமிடம் - 'பருந்துகள்' - ந. இராமநாதன்' அரியாலை மேற்கு
கவிதை முதலாமிடம் - "புதியசூரியர் உதயமாகிறார்" - செல்வி. பாரதிப்பிரியா, கோண்டாவில்
இரண்டாமிடம் - தாயிடம் தனயன் விம்முகிறான் ந. பூங்கண்ணன் தமிழீழ விடுதலைப்புலிகள் வன்னிமாவட்டம்.
மூன்றாமிடம் - தாயகத்தை நேசி - நிலா தமிழின் தாசன், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு நடுவப் பணியகம், கொக்குவில்.

# மாவீரர் எழுச்சி வாரத்தின் இன்றைய நிகழ்வுகள்

மாவீரர் எழுச்சி வாரத்தையொட்டி இன்று யாழ் குடாநாட்டில் வட்ட ரீதியாக கூட்டங்களும் கலை நிகழ்வுகளும் சிரமதானப் பணிகளும் நடைபெறும் விபரம்:

யாழ் வட்டத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு கொட்டடி சனசமூக நிலையத்திலும் கோப்பாய் வட்டத்தில் உரும்பிராய் வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்திலும் உரும்பிராய் கிருஷ்ணன் கோவிலடியிலும் நல்லூர் வட்டத்தில் கந்தர்மடம் நீராவியடி சனசமூக நிலையத்திலும் கந்தர்மடம் ஞானசோதி சனசமூக நிலையத்திலும் சண்டிலிப்பாய் வட்டத்தில் கட்டுடை சுபாஸ் சனசமூக நிலையத்திலும் சங்கானை வட்டத்தில் சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியிலும் உடுவில் வட்டத்தில் உடுவில் தெற்கு சித்தி விநாயகர் கோவிலடியிலும், காந்தரூபன் சனசமூக நிலையத்திலும் உடுவில் தெல்லிப்பழை வட்டத்தில் அளவெட்டி ரோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் அளவெட்டி தும்பு தொழிற்சாலை முகாமிலும் பளை வட்டத்தில் செல்வபுரம் பாலர் பாடசாலையிலும் கொடிகாமம் வட்டத்தில் காம்பைக்குறிச்சி செல்வா சனசமூக நிலையத்திலும் சாவகச்சேரி வட்டத்தில் நுணாவில் கல்வில் பொன்னம்மான் குடியேற்ற திட்டத்திலும் தீவகக்கோட்டத்தில் பானா வெட்டி குடியிருப்பிலும் மாவீரர் எழுச்சிவார கூட்டமும் கலை நிகழ்வும் இடம்பெறும்.

### சிரமதானம்

அத்துடன் பளை வட்டத்தில் கச்சார் வெளியில் விவசாயிகள் நன்மை கருதி வாய்க்கால் திருத்தும் பணி இடம் பெறும். கரவெட்டி வட்டத்தில் அரசியல் துறையினர் ஒழுங்கமைப்பில் மக்களும் போராளிகளும் இணைந்து அல்வாய் கிழக்கு வட்டுவத்தை வாய்க்கால் சிரமதானப் பணி மூலம் சீர் செய்யப்படும்; தீவகக் கோட்டத்தில் சங்கானை நீதவான், வடக்கம்பரை சத்தியக்காடு, பூநகராசி குடியிருப்பு சித்தன்கேணி குத்தணி ஆகிய இடங்களில் துப்புரவு பணிகள் வடிகால் செப்பனிடல் பணிகள் நடைபெறும்;

# நவாலியில் ஆலய மரங்கள் தோட்டவாசிகளால் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

நவாலி கலையோடை அம்மன் ஆலய சுற்றாடலில் இயற்கையாய் அமைந்த மரங்கள் நவாலி மேற்கு சித்தாமணி தோட்டவாசிகளால் அழிக்கப்பட்டு வருகிறதாக ஆலய பிரதமகுரு கவலை தெரிவித்துள்ளார்-

தினமும் இம்மக்கள் தமது விறகுத் தேவையைப் பூர்த்தி செய்ய பெருமளவிலான மரங்களை இரவுவேளைகளில் தறித்து செல்வதால் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்-

# ஆப்கானிஸ்தான் பற்றி உலகநாடுகள் கவனமில்லை

ஆப்கானிஸ்தானில் கடந்த பதினைந்து வருடங்களாக இடம் பெற்றுவரும் போரை உலக நாடுகள் உதாசீனம் செய்து வருவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது ஆரம்ப காலத்தில் இந்த யுத்தத்திற்கு ஆயுதங்களை வழங்கி வந்த வெளி வல்லரசுகள் இப்போது உதவி வழங்கும் பொறுப்பை உடையவை எனவும் அது தெரிவித்துள்ளது

அகதிகளுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக 90 லட்சம் டொலர் தேவைப்படுவதாகவும், கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 1100 பேர் உயிர் இழந்துள்ளதாகவும், 23 000 பேர் சண்டைகளின் போது காயமடைந்துள்ளதாகவும் அது மேலும் கூறியுள்ளது.

# நிராகரிப்பு

மசிடோனியாவில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணிப்பில் அல்பேனிய சிறுபான்மையினரின் தொகை குறைவாக கணிப்பிடப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். மசிடோனியா முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசுகளில் ஒன்று.

கணிப்பின்படி மசிடோனியர்கள 66.5 சதவிகிதம் அல்பேனியர் 22.9 சதவிகிதமாகும். ஆனால் தாம்குறைந்தது மூன்றில் ஒரு பங்கினராக இருப்பதாகவும் அதற்கேற்ப அதிகாரப் பங்கு வேண்டும் என்றும் அல்பேனியர்கள் கூறுகின்றனர். இந்த கணிப்பை நடத்திய போது பிரசன்னமாகியிருந்த சர்வதேச அவதானிகள் ஏற்றுக் கொள்ள முடியாத குற்றச்சாட்டு எனத் தெரிவித்தனர்;

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 11. 19**
**சனி இரவு**

08. 01 - அறிவியற் கலசம்
08. 10 - நிகழ்வும் பகிர்வும்
08. 25 - நேயர் கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் - க. சந்திரா எழுதிய '' விடியலின் எல்லையில் ''
09. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்,

**1994. 11. 20**
**ஞாயிறு காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08 00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்;

# காணாமல்போன மீனவரின் உறவினர் சர்வதேச செஞ்சிலுவையிடம் மகஜர்

### சைக்கிள் ஊர்வலமாக சென்று கையளிப்பு

(குருநகர்)

குருநகர்ப் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச்சென்று காணாமற்போன ஏழு மீனவர்களின் உண்மை நிலைபற்றி அறிந்து உதவுமாறு வலி கிழக்கு கடற்தொழிற் சங்கங்களின் ஒன்றியம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்துளளது.

நேற்று நண்பகல் குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்க பணிமனையில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். பணிமனை நோக்கி நடத்தப்பட்ட சைக்கிள் ஊர்வலத்தின் முடிவில் இம் மகஜர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிட நிர்வாகப் பொறுப்பாளர் செல்வி நடாசாவிடம் கையளிக்கப்பட்டது. இவ் ஊர்வலத்தில் காணமற்போன மீனவர்களின் தாய்மார், மனைவிமார், சகோதரிகள் மற்றும் உறவினர்களும் கலந்துகொண்டனர்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட செல்வி நட்டசா இது சம்பந்தமாக ஏற்கனவே கொழும்பு தலைமைக் காரியாலயத்தின் ஊடாக தொடர்பு கொண்டுள்ளதாகவும், விரைவில் உண்மை நிலையை அறிந்து உரியவர்களுக்கு அறிவிப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் கடந்த ஒன்பதாம் திகதி குருநகரில் இருந்து மீன்பிடிக்கச்சென்று காணாமற்போனவர்களில் ஏழு மீனவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை.

இதேவேளை மறுதினம் 10-ம் திகதி பி.பி.ஸி., வெரித்தாஸ் வானொலிகளில் சிறிலங்கா இராணுவத்தை மேற்கோள்காட்டி ஒலிபரப்பிய செய்தி ஒன்றில் இரண்டு படகுகளில் வந்த ஆறு புலிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், இரண்டு படகுகள் அழிக்கப்பட்டதாகவும், மேலும் இரண்டு படகுகள் தப்பிஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அவ்வாறான இழப்புக்கள் எதுவும் புலிகள் தரப்பில் ஏற்பட்டதாக எமக்கு தெரியவில்லை.

இந்நிலையில் அன்றைய தினம் மண்டைதீவுப் பகுதியில் இராணுவத்தால் சுடப்பட்டவர்கள் திசை தெரியாமல் சென்ற எம் மீனவர்கள் தான் என நம்புகின்றோம்.

எனவே நாம் அன்று மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்ட நபர்களின் உடல்களைப் பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ள தங்களாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுளளது. (21)

## கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல சிற்றூர்திகள், முச்சக்கர மோட்டார் வண்டிகள், மோட்டார் கார்கள், பொதிசுமக்கும் வாகனங்கள் (லொறி) ஆகிய வாகனங்களின் உரிமையாளர்கள் சாரதிகள், நடத்துனர்கள் ஆகியோருக்கான ஓர் முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 10.00 மணிக்கு யா. முத்திரைச் சந்தி ஸ்தான பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில்மேற் குறிப்பிட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தனியார் போக்குவரத்து துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கிணற்றில் குதித்து நீந்திய இளைஞர் மூழ்கி மரணம்

வயல்கிணற்றில் நீந்திவிளையாடியவர் நீரில் மூழ்கி மரணமானார்.

மட்டுவில் வடக்கு வயல் வெளியில் உள்ள கிணறு ஒன்றில் ஐந்து இளைஞர்கள் கிணற்றில் குதித்து நீந்தி விளையாடியபோது அதே இடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் விஜயரட்ணம் (வயது 20) என்பவர் மூழ்கி மரணமானார். கிணற்றில் மரிகால தண்ணீர் கூடுதலாக இருந்ததினால் இவர் மீள முடியாது மூழ்கி மரணமானார். இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றது. (86)

# களவுபோன நகை அனாதரவாகக் கிடந்தது

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவு வேளை யாழ் கொட்டடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் களவாடப்பட்ட ஐம்பது பவுண் தங்க நகையில் 23 பவுண் நகைகள் சில நாட்களின் பின்பு வீட்டு வளவில் அனாதரவாக போடப்பட்டுக் கிடந்தது.

கொட்டடிப் பகுதியில் வசிக்கும் தியாகராசா சோதி என்பவரது வீட்டிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நகைகள் களவு போனதைத் தொடர்ந்து மேற்படி நபர் காவல்துறையினரிடம் புகார் செய்திருந்ததை அடுத்து இனந்தெரியாத நபர்கள் ஒருபகுதி நகையை வீட்டு வளவில் உள்ள ஒரு மூலையில் போட்டிருந்தனர் இதில் 12 பவுண் தாலிக்கொடியும் அடங்கும்.

இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

(இ.ந)

# சீமெந்து ஆலை குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீளவும் இயங்க வைப்பது தொடர்பாக ஆராய்ந்த தொழில் நுட்பக்குழு தனது அறிக்கையை இன்னும் இரண்டொரு தினங்களில் சமர்ப்பிக்கவுள்ளது.

மின்விநியோகம் காங்கேசன் துறை துறைமுக மீள் நிர்மாணம் ஆகியவற்றின் தேவை பற்றியும் இக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இவ் வறிக்கை கிடைத்ததும் அரசு தனது இறுதி முடிவை அறிவிக்கும் எனவும் தெரியவருகின்றது.

# பொ.ஐ.முன்னணியா,உவின் மரணம் திட்டமிட்ட சதி

(கொழும்பு)

வாகன விபத்தில் உயிரிழந்ததாக கருதப்படும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பெர்னாண்டோவின் மரணம் வேண்டுமென்று திட்டமிடப்பட்ட சதி என சந்தேகிக்கக் கூடிய ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக இரகசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அவர் வென்னப்புவ சந்திக்கு செல்ல அரைமணித்தியாலத்துக்கு முன் வீதியில் 3 டயர்கள் போடப்பட்டிருந்ததாகவும், அவற்றை விலத்தி அவர் சென்றபோதே விபத்து நடைபெற்றதாகவும் இரகசியப் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## தலையை

மல்லியின் தலையை கொடூரமான முறையில் வெட்டி தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

இராணுவத்தினரால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்ட போராளியின் தலையை இராணுவத்தினரிடமிருந்து மீட்டுத் தருமாறே விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரை கேட்டுள்ளனர்.

இது குறித்த தமது கோரிக்கையை விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை விடுத்த போதிலும் இரவுவரை எதுத பதிலும் கிடைக்கவில்லை என விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

## புலமை

ம்பு திருக்குடும்ப கன்னியர் மட மாணவியும் 185 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

இம்முறை புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 3,28,000 மாணவர்களில் 26,016 பேர் உதவிப் பணம் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது.

பாடசாலைகளுக்கு முடிவுகள் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## கலந்துரையாடல்

நல்லூர் வட்டத்திற்குட்பட்ட வாசிகசாலைகள், சனசமூக நிலையங்களுக்கான மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு கல்வியங்காடு செங்குந்தா பாடசாலையில் நடைபெற இருப்பதால் அனைத்து வாசிகசாலைகளும், சனசமூக நிலைய அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை,

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் 17 வயது பிரிவு யூனியன் எதிர் புனித யோசப் மகா வித்தியாலயம்.

மலை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் 15 வயது பிரிவு- உடுப்பிட்டி அ.மி.க. எதிர் புங்குடுதீவு ம.வி. 19 வயது பிரிவு-உடுப்பிட்டி அ.மி.க. எதிர் வட்டு இந்து ஸ்கந்தா எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரியும் விளையாடும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் 17 வயது பிரிவு வல்வை சிவகுரு எதிர் அருணோதயா உருமராய் இந்து எதிர் ஹாட்லி 19 வயது பிரிவு- ஹாட்லி எதிர் சிதம்பராக் கல்லூரியும் விளையாடும்

மட்டுவில் சந்திரபுர மைதானத்தில் 19 வயது பிரிவு- சாவகச்சேரி இந்து எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித் நாவாந்துறை றோ. க எதிர் சந்திரபுர ஸ்கந்தவரோதயாவும் விளையாடும்.

## சிரமதானம்

மாவீரர் நாள் நிகழ்வு சம்பந்தமாக யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் தங்கள் பகுதி மாவீரர் துயிலும் இல்ல சிரமதான வேலைகள் நாளை காலை 8-00 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெறவிருப்பதால் தங்கள் விளையாட்டுக்கழக உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கிறது

## பாதுகாப்பு

நியமனமாவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாற்றத்தினால், நாட்டிலுள்ள சகல தரப்பு பாதுகாப்பு படையினதும் ஒத்துழைப்புக்கள் அமைச்சினதும் அரசாங்கத்தினதும் பணிப்புகளுக்கு கிடைக்க வாய்ப்பிருப்பதாகவும்,

வடக்கு-கிழக்கு யுத்தம், ஆயுதக் கொள்வனவு, ஆயுதங்களை உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக இதுவரை கிடைத்த முறைப்பாடுகளை பரிசீலித்த பின்னரே இந்தமுடிவுக்கு அரசாங்கம் வந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முன்னாள் படை அதிகாரியும் தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான ஹமில்டன் வணசிங்க அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் கீழ் கட்டாய லீவில் அனுப்பப்படுவாரா என அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்காவிடம் பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது, இதற்கு எவ்வித கருத்தையும் தெரிவிக்க தாம் விரும்பவில்லையென பதிலளித்துள்ளார்.

## ராணுவம்

ஜனாதிபதியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா பொறுப்பேற்ற பின்னர் நடைபெற்ற மிக மோசமான சம்பவமாக இது கருதப்படுகின்றது.

இச்சம்பவத்தில் லெப். கேணல் மல்லி [அமுதன்] [சின்னத்தம்பி பத்மநாதன் 4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு] என்பவரோடு வீரவேங்கை அருளப்பனும் [நகுலேசபிள்ளை ஜெயக்குமார் முத்தவிநாயகர் வீதி, நல்லூர்] வீரச்சாவடைந்தார். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### மூன்று நாள் ஆய்வுப்பட்டறையில்

# தமிழீழ பிரதேசங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பு

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள், பிரதிநிதிகள், தொழில்சார் வல்லுனர்கள், புத்திஜீவிகள் கலந்து கொண்ட ஆய்வுப்பட்டறையில் இரண்டாயிரமாம் ஆண்டில் தமிழீழ பிரதேசங்களின் அபிவிருத்தி பற்றிய திட்டங்கள் உலகளாவிய ரீதியில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டங்கள் சகல துறைகளையும் உள்ளடக்கியதாக புதிய தலைநகரம்முதல் கிராமம்வரையான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தொழில்சார் அபிவிருத்தித் திட்டங்கள் போக்குவரத்து, விவசாயம், மீன்பிடி மற்றும் சகலதுறைகளையும் உள்ளடக்கியதாக அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன தற்போது இவ் அபிவிருத்தித்திட்ட அடிப்படையான அம்சங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளதாகவும் 1995ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆண்டுவரையான திட்டங்கள் வகுக்கப்பட்டு 21ஆம் நூற்றாண்டிற்கு தமிழீழத்தை அழைத்துச்செல்வதற்கான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்கள் பற்றிய கருத்துக்கள் புத்திஜீவிகள் மற்றும் துறைசார் வல்லுனர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இங்கு நடைபெற்றுவந்த அபிவிருத்திகள் ஒரு சிலரின் எண்ணக்கருத்தில் இருந்து தான் உருவானது இதனால் ஒரு முழுமையான செயல் திட்டம் ஒன்றில்லாமல் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாமல் இருந்து வந்தது.

இந் நிலைமைமாறி இப்போ அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும்போது பழைய நிலைமைக்கு கொண்டு வராமல் 2000ஆம் ஆண்டில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை திட்டமிட்டு என்னென்ன முறைகளில் அபிவிருத்தியாளப்பட வேண்டும்என்பதை ஒவ்வொரு துறைகளிலும் வகுத்து அதற்கான அறிவுரைகள்என்பனவற்றைக் கொண்டு இத் திட்டம் உருவாக்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி.ச)

## பேச்சு வார்த்தை

வினைகப் போவதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது என்று மற்றுமொரு சாராரும் திருமதி சந்திரிகாவிற்கு ஆலோசனை கூறிவருகின்றனர், எனினும் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கா இது வரையில் எந்த விதமான திட்டவட்டமான முடிவுக்கும் வந்ததாகத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டுளளார்-

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய திசையில் சமாதான முயற்சிகள் எதுவும்நடைபெறுகிறதா இல்லையா என்ற கேள்விக்கு இப்போது தெளிவான பதில் ஏதும் இல்லை என மேலும் அவர் தெரிவித்தார்-

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசு நடத்தும் பேச்சுக்கள் பற்றிய கருத்துக் கணிப்பாக தேர்தலை மாற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகள் எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன அக்டோபர் திங்களில் நடந்த முதல் கட்ட பேச்சுக்களுக்குப் பின்னர் அரசு ஒன்றும் தெரியாத வகையில் திறமைபற்றது - பேச்சுவார்த்தைகள் குறித்த திட்டங்களை விடுதலைப் புலிகள் முடிவுசெய்ய அனுமதித்து விட்டது என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா பெற்ற வெற்றிக்குப் பின்னால் வேறு பல காரணங்களும் இருக்கக்கூடும். எனினும் இதனை சமாதானத்திற்கான மக்களின் வாக்கு என்று தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த சமாதானத்தை எப்படிப் பெறுவது என்பது வேறு விடயம். இது குறித்து எப்படிச் செயற்பட வேண்டும் என்பது திருமதி சந்திரிகாவிற்கு நிச்சயமாக தெரியவில்லை எனவும் கூறப்படுகிறது-

ஆனால் இவைகளில் நடப்பவை நல்ல அறிகுறிகளாக இல்லை சமாதான முயற்சிகள் குறித்து முன்பு நிலவிய நம்பிக்கை எதிர்பார்ப்பு என்பனவற்றுக்கு பதிலாக இப்போது சந்தேகமும் ஐயப்பாடுகளுமே காணப்படுகின்றன.

சமாதான முயற்சிகளில் இருந்து விடுதலைப்புலிகள் அப்புறப்படுத்தப்பட்டால் சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவது சாத்தியமல்ல என்று ஜனாதிபதி சந்திரிகா அரசின் உயர் உறுப்பினர்கள் தொடர்ந்து கூறிவருகின்றனர்

எனவே பேச்சுவார்த்தைகள் ரகசியமான முறையில் கடுமையான திட்டங்களுடன் மீண்டும் தொடங்கக்கூடும் என்றே எதிர்பார்க்கலாம் எனவும் பி.பி.ஸியின் முகவர் மேலும் தெரிவித்தார்.

# தொண்டமானாறு நீரேரியில் தொழில் செய்வதில் நிபந்தனை

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 23-2 1980 இல் நடைபெற்ற வல்லை நன்னீர் தொடுவாய் கண்டி கட்டல் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக

1) வல்லைத் தொடுவாயில் போடப்பட்ட கண்டிகள், அப்படியே இருக்கும் ஆனால் இரண்டு கண்டிக்குமிடையே உள்ள கைமீன் கூடுகள் ஒவ்வொரு நாளும் 1-00 மணி முதல் பின்னேரம் 5-00 மணி வரை மட்டும் அகற்றப்பட்டு கடற்பிராணிகள் பாயும் தண்ணீருடன் போய்க்கொண்டிருக்க வகைசெய்ய வேண்டும்.

2) ஒருவரும் வல்லைப் பாலத்தடியில் படுக்கைவலை போடக்கூடாது.

19 2 1992 இல் எடுக்கப்பட்ட படுப்பு வலை, இழுப்பு வலை தொடர்பான பிணக்குகள் தொடர்பாக வடமராட்சி வடக்கு ஒன்றியத்தில் தற்காலிகமாக போர்க்கால சூழ்நிலையை முன்னிட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக

1) ஐப்பசி 1-ம் திகதி முதல் தை 31-ம் திகதிவரை படுப்பு வலை இழுப்பு வலை ஆகிய இருவகைத் தொழில்களும் தொண்டமானாறு தொடக்கம் முகளிவரையும் உள்ள பகுதிகளில் செய்யக்கூடாது. மாசி 1 முதல் புரட்டாதி 30 வரை இவ்விரு தொழில்களும் செய்யலாம்.

2) தண்ணீர் பாய்ச்சலை மறித்து கண்டிகட்டுதல் முற்றாகத் தடை- செய்யப்பட்டுள்ளது

இப்பகுதியில் தொழில் செய்யும் சகலரும்; மேலே சொல்லப்பட்ட விடயங்களை உடனடியாக கவனத்தில் எடுக்குமாறு வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் ஒன்றியச் செயலாளர் திரு. த. சுந்தரலிங்கமும், கடற்தொழில் பரிசோதகர் திரு. ந கணேசமூர்த்தியும் கூட்டாக வேண்டிக்கொள்கிறார்கள். இது தொடர்பாக ஏதாவது தொடர்பு கொள்ள விரும்பின் வடமராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். (9856)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சங்கரப்பிள்ளை

தைட்டிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தோப்பு வளவில் வசித்து வந்தவருமாகிய கந்தையா சங்கரப்பிள்ளை 18-11-94 அன்று காலமானார்.

இவர் காலம் சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், மகாலிங்கம் [U K], காலம் சென்ற பரம்சோதி (பேபி), தேவராணி (ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவகாமி U K) தம்பையா ஆகியோரின் மாமனாரும், நந்தகௌரி, விஜயகௌரி [U.K] இலட்சுமணன் [U.K] கௌரிகரன் (யாழ் தொழில் நுட்பக் கல்லூரி, சங்கர் U K), சிவாகர் U K), கௌரிகாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமை (18-11-94) இல் சுன்னாகத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

தகவல்:
கௌரிகரன்
(பேரன்)

கௌரி அகம்
தோப்பு வளவு,
சுன்னாகம்.

(10133)

## திரு. சேனாதி சண்முகநாதன்

அத்தியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சேனாதி சண்முகநாதன் (கிளி) அவர்கள் 18-ம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் திருமதி லீலாவதியின் அன்புக் கணவரும், சிவராஜா, யோகராஜா (ஆனந்தி) (உரிமையாளர் சிவானந்தா கபே, நல்லூர்), இந்திராணி, ரஞ்சினி, ஜெயதாஸ் (உரிமையாளர், ஜெயா பல்பொருள் வாணிபம், நல்லூர்) ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி சி. இராஜமணி திரு. மனோகரன் (லங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்), திருமதி யோ. சிவனேஸ்வரி, திரு. ஸ்ரீகாந்தன் (செந்தூரன்) (உரிமையாளர், காவேரி மருந்தகம் கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷர்மிலி ஷர்மிளா, சஞ்சீர், சஞ்ஜித், மயூரன், செந்தூரன், அர்ச்சனா, துஷாந், நிரஜவா, ஷகிலா, சுவேனித்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 20-11-94 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று காலை 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகராஜா (ஆனந்தி)
(மகன்)
(சிவானந்தா கபே நல்லூர்)

50/23செட்டித் தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-10739)

6 வது வெற்றி வாரமாக

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்

பொ. தாசனின்

"இன்னும் ஒரு நாடு"

தினசரி பிற்பகல் 2-30, 4-00, 6-00

சனி, ஞாயிறு காலை 10-30, 2.30, 4-30, 6-30

(சி-10738)

# கண்ணீர் அஞ்சலி

### வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை அருளப்பன்

### (நகுலேசபிள்ளை ஜெயக்குமார்)

(சரணை)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இவர் இராமலிங்கம் நகுலேசபிள்ளை (சமாதான நீதவான், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க பொதுச்சபை பிரதிநிதியும்) அவர்களின் மகனுமாவார். இவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
பொதுச்சபை பிரதிநிதிகள்,
அங்கத்தவர்கள்
ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்

(சி-10737)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.